உ
நமச்சிவாய்யம்

கோயில் விழாக்களின் வாஹன உலா

(ஆலய உத்ஸவ வாஹன யானக்ரமம்)

ஒன்பது வகைக் கோயில்களின் தெய்வவிழாவின் வீதி உலா புறப்பாட்டு விதிமுறைகள், ஸேவாகாலத் திருமுறைத்துதிகள், 50 வாஹன விளக்கப்படங்கள் அடங்கிய நூல்.

தொகுப்பாசிரியர்
ஆகம ப்ரவீணர், வ்யாகரண சிரோமணி
சிவஸ்ரீ. விஜய. சோமசேகர சிவாசார்யர் M.A.,

வெளியீடு நாள் :
15-11-2021, திங்கட்கிழமை

ஸ்ரீலோகோஸ் இண்டர்நேஷனல்

வெளியீடு
சிவாச்சார்யர் அறக்கட்டளை (பதிவு)
மற்றும்
சிவஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யர் டிரஸ்ட் (பதிவு)
207/01, தம்புசெட்டி தெரு, சென்னை - 600 001.
&
ஸ்ரீ லோகோஸ் இண்டர்நேஷனல்
சென்னை - 600 078.

Sri LOGOS
INTERNATIONAL

No. 14, First Cross Street,
6th Kanaka sabai Street,
Dr. Kanu Nagar, Nesapakkam,
Chennai-78. Cell : 9003113311 / 9003114444

திருக்கோவில் நிர்மாணம், சிலா மற்றும் ஐம்பொன் விக்ரகங்கள்
தேர், ரதம், வாகனங்கள் மற்றும் சகலவித திருக்கோவில்
உபகரணங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியாளர்.

ப்லவ வருஷம் ஐப்பசி திங்கள் 29 ம் நாள்
(15.11.2021) சோமவாரம்

சிரஞ்சீவி. **B. வேதேஸ்வர சர்மா**

சௌபாக்கியவதி. **K. ஸ்ரீ ஹரிணி**

திருமண விழாவை முன்னிட்டு
இந்நூலினை பதிப்பிட்டு வெளியிடுவதில்
பெருமகிழ்ச்சியடைகிறோம்.

உ

நமச்சிவாய்யாம்

கோயில்விழாக்களின் வாஹனஉலா

(ஆலய உத்ஸவ வாஹன யானக்ரமம்)

ஒன்பது வகைக் கோயில்களின் தெய்வவிழாவின் வீதி உலா புறப்பாட்டு விதிமுறைகள், ஸேவாகாலத் திருமுறைத்துதிகள், 50வாஹன விளக்கப்படங்கள் அடங்கிய நூல்)



தொகுப்பாசிரியர்

ஆகம ப்ரவீணர், வ்யாகரன சிரோமணி, சைவாகமக்கு சூடாமணி, சைவாகம வித்வான், வ்யாகரண விசாரதா, சிவாகம ஸார்வபௌம:, சிவஸம்வித் ஸபர்யா பாராவாரீணர், சிவாகம அருட்செல்வர், ஸம்ஸ்க்ருத சேவாரத்தினம், சிவாகம வாசஸ்பதி, வாஸ்து வித்தகர், சைவாகமஸ்ரீ:, ஆகம கல்பத்ரும:, ஆகம வித்தகர், சிவாகம வித்யாரத்னம், சாக்தயாக சாம்ராட், வைதிகசைவ ரக்ஷாமணி, சிவபாத பத்மபூஷணம், சிவாகமக் கலாநிதி. சைவஸமய ஸேவாரத்னம். சைவாகம பரீக்ஷாதிகாரீ, யாக ஸர்வஸாதக திலகம், சாஸ்தாஉபாஸகர், அகோரசிவம் என்கிற

சிவஸ்ரீ. விஜய. சோமசேகர சிவாசார்யார் M.A.,

குருமுதல்வர். சைவாகம கலாசார வித்யாகேந்திரம், சென்னை-1.

வெளியீடு

நாள் : 15-11-2021. திங்கட்கிழமை

சிவாசார்யார் அறக்கட்டளை - சென்னை-1.

சிவஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யார் டிரஸ்ட் - சென்னை-1. &

ஸ்ரீ லோகோஸ் இன்டர்நேஷனல் - சென்னை-78.

நூல்விளக்கக் குறிப்பு

நூலின்பெயர், தலைப்பு	: கோயில்விழாக்களின் வாஹனஉலா
நூலின் துறை	: இந்துசமய ஆகமத்துறை
நூலின் வகை	: ஆகமச்சான்றுவழித் தொகுப்புநூல்
நூலின் பொருள்	: ஆலயவிழாக்களின் புறப்பாட்டுமுறை (ஆலய உத்ஸவவாஹன யான க்ரமம்)
நூலின் மொழி	: ஸம்ஸ்கிருதம் & தமிழ்
நூலின் எழுத்து	: தமிழ் எழுத்துமட்டில்
பதிப்பாசிரியர் & நூலாசிரியர்	: சிவஸ்ரீ.வி.சோமசேகர சிவாசார்யர்
படத்தொகுப்பு & நூல்வடிவமைப்பு	: சிவஸ்ரீ.வி.சோமசேகர சிவாசார்யர்
நூலின் பதிப்புரிமை	: நூலாசிரியருக்கே உரியது.
நூல் அளவு	: 8.5" x 5.5"
நூலின் பக்கங்கள்	: 256 பக்கங்கள்
வெளியீட்டு நூல்வரிசை	: 28
அட்டைப்பட விளக்கம்	: ஒன்பதுகோயில்விழா தெய்வங்களின் புறப்பாடு
முதற்பதிப்பு	: 15-11-2021
அச்சிட்ட எண்ணிக்கை	: 1000 பிரதிகள்
வெளியீடு	: சிவாசார்யார் அறக்கட்டளை, சென்னை-1 சிவஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யார் டிரஸ்ட்,சென்னை-1 ஸ்ரீலோகோஸ் இன்டர்நேஷனல், சென்னை.
நன்கொடை அளித்தவர்	: சிவஸ்ரீ S. பாலகுமார் குருக்கள் நெசப்பாக்கம், சென்னை-78.
வெளியீட்டுவிழா	: B.வேதேஸ்வரன்,K.ஸ்ரீஹரிணீ திருமணவிழா
புத்தகத்தின் விலை	: விலை ரூ.400/-
அச்சகம்	: ஓம் டிஜி ஒர்க்ஸ், சென்னை-40.
புத்தகம் கிடைக்கும் இடம்	: அறக்கட்டளை & நூலாசிரியர்அகம்.
நூலைபெறத் தொடர்புக்கு	: 98402 99352 / 99402 01849

உரிமை : ©
இந்தப் புத்தகத்திலுள்ள எந்த ஒரு பகுதியையும் நூலாசிரியர் அனுமதியை எழுத்து மூலம் பெறாமல் பதிப்பிக்கக் கூடாது.

Copyright © All rights reserved including the rights of reproduction in whole or in part in any form.

ஞானதீப நமஸ்காரம்

(காலைமாலை இருவேளையும், தீபம்ஏற்றிவைத்து, இந்த ஸ்லோகத்தைக் கூறி நமஸ்காரம்செய்தால் சகல ஸௌபாக்யங்களும் ஏற்படும்.)

ஸுவர்ண வ்ருத்திம் குரு மே க்ருஹே ச்ரீ:
ஸுதான்ய வ்ருத்திம் குரு மே க்ருஹே ச்ரீ:
கல்யாண வ்ருத்திம் குரு மே க்ருஹே ச்ரீ:
விபூதி வ்ருத்திம் குரு மே க்ருஹே ச்ரீ:

***

சுபம் பவது கல்யாணி! ஆயுராரோக்ய ஸம்பதாம்.
சத்ரு புத்தி விநாசாய தீப ஜ்யோதிர் நமோஸ்துதே.

***

பகவதீ ஸ்துதி (காலைவணக்கம்)

பிராதஸ் ஸ்மராமி சரதிந்து கரோஜ்வலாபாம்
ஸத்ரத்னவன் மகர குண்டல ஹாரபூஷாம்
திவ்யாயுதோர்ஜித ஸுநீல ஸஹஸ்ரஹஸ்தாம்
ரக்தோத்பலாப சரணாம் பவதீம் பரேசாம். 1

பிராதர் நமாமி மஹிஷாஸுர சண்டமுண்ட
சும்பாஸுர ப்ரமுக தைத்ய விநாச தக்ஷாம்.
பிரம்மேந்த்ர ருத்ர முனி மோஹநசீலலீலாம்
சண்டீம் ஸமஸ்த ஸுரமூர்த்தி மனேக ரூபாம். 2

பிராதர் பஜாமி பவதா மபிலாஷ தாத்ரீம்
தாத்ரீம் ஸமஸ்தஜகதாம் துரிதாப ஹந்த்ரீம்
ஸம்ஸார பந்தன விமோசன ஹேது பூதாம்
மாயாம் பராம் ஸமதிகம்ய பரஸ்ய விஷ்ணோ:. 3

*****

சாமுண்டா ஜயார்களா ஸ்தோத்திரமந்திரம்

ஜய த்வம் தேவி! சாமுண்டே! ஜய பூதார்த்திஹாரிணி!
ஜய ஸர்வகதே! தேவி! காலராத்ரி நமோஸ்துதே!

கோமாதாஸ்துதி. (பசுவணக்க துதி)

இந்த அபூர்வமான ஸ்தோத்ரத்தைச் சொல்லி கோபூஜை செய்து, பிரதக்ஷிணம் செய்தால் அளவற்ற புண்யமாகும். சகல பாக்யங்களும் ஏற்படும். வாசக அன்பர்கள் பயன் பெறவேண்டும்.

நமோ தேவ்யை மஹாதேவ்யை ஸுரப்யை ச நமோ நம:.
கவாம் பீஜ ஸ்வரூபாயை நமஸ் தே ஜகதம்பிகே. 1

நமோ ராதா ப்ரியாயை ச பத்மாம்சாயை நமோ நம:.
நம: கிருஷ்ண ப்ரியாயை ச கவாம் மாத்ரே நமோ நம:. 2

கல்பவிருக்ஷ ஸ்வரூபாயை ஸர்வேஷாம் ஸந்ததம் பரம்:
ஸ்ரீதாயை தனதாயை ச வ்ருத்திதாயை நமோ நம:. 3

சுபதாயை ப்ரஸன்னாயை கோபதாயை நமோ நம:.
யசோதாயை கீர்த்திதாயை தர்மக்ஞாயை நமோநம:. 4

இதம் ஸ்தோத்ரம் மஹத்புண்யம் பக்தியுக்தச்ச யப்படேத்.
ஸ கோமான் தனவான் சைவ கீர்திமான் புத்ரவான் பவேத். 5

உ

ஸ்ரீ குருப்யோ நம:

ஆதிசைவ ஸம்ப்ரதாய குருவந்தனம்

நமோ ப்ரம்மபதார்த்தாய லோகானாம் ஸித்திஹேதவே.
ஸச் சிதா னந்த ரூபாய சிவாய பர மாத்மனே.

ஸதாசிவம் அனந்தம் ச ஸ்ரீகண்டம் புனர் அம்பிகாம்.
குஹம் விஷ்ணும் ச தாதாரம் குரூன் ஸப்த ஸமாச்ரயே.

குருர் பிரம்மா குருர் விஷ்ணுர் குருர் தேவோ மஹேச்வர:.
குருஸ் ஸாக்ஷாத் பரம் ப்ரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம:.

குரவே ஸர்வ லோகானாம் பிஷஜே பவ ரோகினாம்.
நிதயே ஸர்வ வித்யானாம் தக்ஷிணா மூர்த்தயே நம:.

ஸ்ரீகண்ட வம்சோததி பூர்ணசந்த்ரம்
ஸ்ரீகண்ட சாஸ்த்ரார்த்தவிதம் முநீந்த்ரம்.
ஸ்ரீகண்ட பாவாஞ்சித யக்ஞஸூத்ரம்
ஸ்ரீகண்ட மாசார்ய மஹம் பஜாமி.

தூர்வாஸ கௌசிக விரிஞ்சி ம்ருகண்டு புத்ர
தேவேந்த்ர பாண ஹரி சக்தி ததீசி ராமான்.
கண்வாத்ரி பார்கவ ப்ருஹஸ்பதி கௌதமாதீன்
புண்யான் இமான் பரம பாசுபதான் நமாமி.

சுத்த ஸ்படிக ஸங்காசான் மந்தஸ்மித முகாம்புஜான்
வ்யாக்யா புஸ்தகஸம்யுக்தான் சிவஞான ப்ரபோதகான்.
குரூன் பராபரான் ஸர்வான் குருவம்ச க்ரமாகதான்
அஸ்மத் ஆசார்ய பர்யந்தான் வந்தே தேசிக புங்கவான்.

சிவம் சக்திம் கணாதீசம் குஹம் வாகீச்வரீம் க்ரமாத்.
தூர்வாஸஸம் அஹம் வந்தே பைங்களாத்யாம்ச்ச தேசிகான்.

சைவாகமபத்ததி ஆசார்ய வந்தனம்



ஸ்ரீ குருப்யோ நம:

தூர்வாஸாப் பிங்களஸ் சைவ உக்ரஜ்யோதிஸ் ஸுபோதக:.
ஸ்ரீகண்டோ விஷ்ணுகண்டஸ் ச வித்யாகண்டஸ் ததைவ ச.
ராமகண்டோ ஞானசிவோ ஞானசங்கர ஏவச.
ஸோம சம்பூர் ப்ரம்ம சம்பூர் த்ரிலோசன சிவஸ் ததா.
அகோர சிவ ஏவாத ப்ராஸாத சிவ ஏவச.
ராமநாத சிவஸ் சைவ ஈசான சிவ ஏவச.
வாருணாக்ய சிவஸ்சைவா(அ)ஷ்டாதசா சார்யபுங்கவா:.
ஏதைர் திவ்யைர் சிவாசார்யைர் பத்ததிப் பரிபாஷிதா:.
தேப்யோ நித்யம் நமோ திவ்ய தேசிகேந்த்ரரேப்ய ஏவச.
ஸித்தாந்த மார்க்கதர்சிப்யோ ஆசார்யேப்யோ(அ)ஸ்து மே நதி:.

சுந்தரஸ்தவ: கேயூர குண்டல கிரீட விபூஷிதாங்கம்
ஹஸ்தோத்பலம் கடிகரம் த்ருத ராஜவேஷம்.
ருத்ராக்ஷ ருத்ரஜப பூதி லலாட பாஜம்
த்யாயேத் த்ரிபங்க சிவசுந்தர மூர்த்தி ரூபம்.

சைவ ஸந்தான ஆசார்யர்கள்

இஷ்டதேவதாவந்தனம்



ஓங்காரம் பிந்துஸம்யுக்தம் நித்யம் த்யாயந்தி யோகின:.
காமதம் மோக்ஷதம் சைவ ஓங்காராய நமோ நம:.

ஸ்ரீ விக்னேசஸ்துதி:

விக்னேசோ வ: ஸ பாயாத் விஹ்ருதிஷு ஜலதீன்
புஷ்க ராக்ரேண பீத்வா.
யஸ்மின் உத்ருத்ய தோயம் வமதி தத் அகிலம்
த்ருச்யதே வ்யோம்னி தேவை:.
க்வாப் யம்ப: க்வாபி விஷ்ணு: க்வசந கமலபூ:
க்வாப் யநந்த: க்வ சசீ:
க்வாப் யௌர்வ: க்வாபி சைலா: க்வசந மணிகணா:
க்வாபி நக்ராதி ஸத்வா:.

ஸ்ரீ நடராஜர்துதி:

க்ருபாஸமுத்ரம் சுமுகம் த்ரிணேத்ரம்
ஜடாதரம் பார்வதி வாமபாகம்.
ஸதாசிவம் ருத்ர மனந்தமூர்த்திம்
சிதம்பரேசம் ஹ்ருதி பாவயாமி.

ஸ்ரீ மஹாசாஸ்தா துதி.

ஆசானுரூப பலதம் சரணாரவிந்த
பாஜாமபார கருணார்ணவ பூர்ணசந்த்ரம்
நாசாய ஸர்வ விபதா மபி நௌமி நித்யம்
ஈசான கேசவபுவம் புவனைக நாதம்.

ஸ்ரீ ராஜாராமர் துதி

ராமோ ராஜாமணிஸ் ஸதா விஜயதே ராமம் ரமேசம் பஜே
ராமேணா(அ)பி ஹதா: நிசாசர சமூ: ராமாய தஸ்மை நம:.
ராமாத் நாஸ்தி பராயணம் பரதரம் ராமஸ்ய தாஸோ(அ)ஸ்மி யஹம்
ராமே சித்த லய: ஸதா பவது மே போ! ராம! மாம் உத்தர.

லோகாபி ராமம் ரண ரங்க தீரம். ராஜீவ நேத்ரம் ரகுவம்ச நாதம்.
காருண்யரூபம் கருணாகரம் தம். ஸ்ரீராமசந்த்ரம் சரணம் ப்ரபத்யே.

சைவாகம ஆசார்ய வந்தனம்.

ஸ்ரீமத் பஞ்சரிஷீந்த்ர கோத்ர தனுஜான் பஞ்சானனைர் தீக்ஷிதான்.
லிங்காக்னி சூர்ய கலச ஸ்வாத்மார்ச்சனா பூஷணான்.
சைவாசார்யவரான் ஸதா பசுபதிம் கால த்ரயேப் யர்ச்சகான்
ஸத் பக்தான் சிவமானஸான் ஹ்ருதி பஜே சைவாகமோத்தாரகான்.

குருவந்தனம்

குரும் கணபதிம் ஸ்கந்தம் ஸாம்பம் ச பரமேச்வரம்.
வந்தே வாணீம் மஹாலக்ஷ்மீம் இஷ்டகாம்யார்த்த ஸித்தயே. 1

ஸ்ரீகிருஷ்ணபகவான் துதி

வாசுதேவசுதம் தேவம் கம்ஸ சாணூரமர்தனம் 2
தேவகீபரமானந்தம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்.

ஸ்ரீ அண்ணாமலையார் துணை



ஓம் நமோபகவதே அருணாசலேச்வராய சிவாய நம:

அண்ணாமலையாரின் சோனாத்ரிநாத ஸ்துதி அஷ்டகம்.

சிவாய ருத்ராய சிவார்ச்சிதாய மஹானுபாவாய மஹேச்வராய.
ஸோமாய ஸூக்ஷ்மாய சுரேச்வராய சோணாத்ரிநாதாய நமச்சிவாய. 1

திக்பால நாதாதி விபாவநாய சந்த்ரார்த்த சூடாய ஸநாதனாய.
ஸம்ஸார துக்கார்ணவ தாரணாய சோணாத்ரிநாதாய நமச்சிவாய. 2

ஜகன் நிவாஸாய ஜகத் ஹிதாய ஸேநாநிதானாய ஜய ப்ரதாய.
பூர்ணாய புண்யாய புராதனாய சோணாத்ரிநாதாய நமச்சிவாய. 3

வாகீச வந்த்யாய வர ப்ரதாய உமார்த்த தேஹாய கணேச்வராய.
சந்த்ரார்க்க வைச்வாநரலோசனாய சோணாத்ரிநாதாய நமச்சிவாய. 4

ரதாதிரூடாய ரஸாதராய வேதாச்வ யுக்தாய விதி ஸ்துதாய.
சந்த்ரார்க்க சக்ராய சசிப்ரபாய சோணாத்ரிநாதாய நமச்சிவாய. 5

விரிஞ்சி ஸாரத்ய விராஜிதாய கிரீந்த்ர சாபாய கிரீச்வராய.
பாலாக்னி நேத்ராய பணீச்வராய சோணாத்ரிநாதாய நமச்சிவாய. 6

கோவிந்தபாணாய குணத்ரயாய விச்வஸ்யநாதாய வ்ருஷத்வஜாய.
புரஸ்ய வித்வம்ஸந தீக்ஷிதாய சோணாத்ரிநாதாய நமச்சிவாய. 7

ஜராதி வர்ஜ்யாய ஜடா தராய அசிந்த்ய ரூபாய ஹரி ப்ரியாய.
பக்தஸ்ய பாபௌக விநாசநாய சோணாத்ரிநாதாய நமச்சிவாய. 8

ஸ்துதிம் சோணாசலேசஸ்ய படதாம் ஸர்வஸித்திதம்.
ஸர்வஸம்பத்ப்ரதம் பும்ஸாம் ஸேவந்தாம் ஸர்வதோ ஜநா:.

உ

ஸதாசிவ ஸ்தவ தசகம். (ரௌரவாகமம்)

ஸுராதிபம் நமஸ் க்ருத்ய சசாங்க க்ருத சேகரம்.
கபால மாலிநம் தேவம் ப்ரணதோ (அ)ஸ்மி ஸதாசிவம். 1

காலேச்வரம் மஹாகாலம் காலஞ்ஜர நிவாஸிநம்.
காலக்ருத் காலதாதாரம் ப்ரணதோ (அ)ஸ்மி ஸதாசிவம். 2

ஸர்வக்ருத் ஸர்வவேத்தாரம் ஸர்வக்ஞம் அபராஜிதம்.
ஸர்வபூதாத்ம பூதஸ்தம் ப்ரணதோ(அ)ஸ்மி ஸதாசிவம். 3

யோ (அ)ஸ்ருஜத் ஸர்வபூதாநி ப்ரம்மாத்யான்ச சுராசுரான்.
தமஹம் லோககர்த்தாரம் ப்ரணதோ(அ)ஸ்மி ஸதாசிவம். 4

வரம் வரேண்யம் வரதம் வரிஷ்டம் வர வாஹனம்.
வனமாலா தரம் தேவம் ப்ரணதோ(அ)ஸ்மி ஸதாசிவம். 5

ப்ரீதிமத் ப்ரீதி தாதாரம் ஸுப்ரியம் ப்ரிய தர்சனம்.
உமாப்ரியம் ஸதா காந்தம் ப்ரணதோ(அ)ஸ்மி ஸதாசிவம். 6

தர்மா தர்ம மயம் தேவம் சுக துக்க பலோதயம்.
பந்த மோக்ஷ ப்ரணேதாரம் ப்ரணதோ(அ)ஸ்மி ஸதாசிவம். 7

மனோ புத்தி ரஹங்கார தன்மாத் ரேந்த்ரிய கோசரம்.
ப்ரதான புருஷேசானம் ப்ரணதோ(அ)ஸ்மி ஸதாசிவம். 8

யம் த்யாயந்தி மஹாத்மானோ முநயஸ் ஸம்சித வ்ரதா:
தம் ஓங்காரபரம் சூக்ஷ்மம் ப்ரணதோ(அ)ஸ்மி ஸதாசிவம். 9

சூக்ஷ்மம் ஸர்வகதம் நித்யம் ஸர்வவித்யேச் வரேச்வரம்.
ஸர்வ தத்வாச்ரயம் தேவம் ப்ரணதோ(அ)ஸ்மி ஸதாசிவம். 10

ஓம் நமோ பகவதே பரமஹம்ஸாய பரமகுரவே ஸதாசிவாய நம:

உ

குருவே துணை

இறைவணக்கம்



தெய்வத் திருமுறைத் துதித்திரட்டு

1–ம் திருமுறை

திருஞானசம்பந்தர் ராகம் : நட்டபாடை
திருப்பிரமபுரம் (சீர்காழி) தாளம் : ரூபகம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி என் உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே.

2–ம் திருமுறை

திருஞானசம்பந்தர் ராகம் : சீகாமரம்
திருவெண்காடு தாளம் : ரூபகம்

கண் காட்டும் நுதலானும் கனல் காட்டும் கையானும்
பெண் காட்டும் உருவானும் பிறை காட்டும் சடையானும்
பண் காட்டும் இசையானும் பயிர் காட்டும் புயலானும்
வெண் காட்டில் உறைவானும் விடை காட்டும் கொடியானே.

3–ம் திருமுறை

திருஞானசம்பந்தர் பண் : புறநீர்மை
திருவீழிமலை தாளம் : ஆதி

புள்ளித்தோல் ஆடை பூண்பது நாகம் பூசு சாந்தம் பொடி நீறு
கொள்ளித்தீ விளக்கு கூளிகள் கூட்டம் காளியைக் குணம் செய் கூத்து உடையோன்
அள்ளல் கார் ஆமை அகடு வான் மதியம் ஏய்க்க முள் தாழைகள் ஆனை
வெள்ளைக் கொம்பு ஈனும் விரி பொழில் வீழி மிழலையான் என வினை கெடுமே.

4–ம் திருமுறை

திருநாவுக்கரசர் ராகம் : நவரோஸ்
திருவையாறு திருவிருத்தம்

கங்கையைச் சடையுள் வைத்தார் கதிர்ப்பொறி அரவும் வைத்தார்
திங்களைத் திகழ வைத்தார் திசைதிசை தொழவும் வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார் மான்மறி மழுவும் வைத்தார்
அங்கையுள் அனலும் வைத்தார் ஐயன் ஐயாறனாரே.

5–ம் திருமுறை

திருநாவுக்கரசர் ராகம் : நடபைரவி
திருப்பேரெயில் திருக்குருந்தொகை தாளம் : ஆதி

மறையும் ஓதுவர் மான் மறிக் கையினர்
கறை கொள் கண்டம் உடைய கபாலியார்
துறையும் போகுவர் தூய வெண் நீற்றினர்
பிறையும் சூடுவர் பேரெயி லாளரே.

6–ம் திருமுறை

திருநாவுக்கரசர் ராகம் : ஹரிகாம்போதி
திருபூவணம் திருத்தாண்டகம்

படை மலிந்த மழு வாளும் மானும் தோன்றும்
பன்னி ரண்டு கண் உடைய பிள்ளை தோன்றும்
நடை மலிந்த விடையோடு கொடியும் தோன்றும்
நால்மறையின் ஒலி தோன்றும் நயனம் தோன்றும்
உடை மலிந்த கோவணமும் கீளும் தோன்றும்
ஊரல் வெண் சிரமாலை உலாவித் தோன்றும்
புடை மலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்
பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே.

7–ம் திருமுறை

சிதம்பரம் (கோயில்) ராகம் : குறிஞ்சி
சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாளம் : கண்டசாபு

மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே மனனே நீ வாழு நாளுந்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத் தாட் கொள்வான்
கடுத்தாடும் கரதலத்தில் தமருகமும் எரி அழலுங் கரிய பாம்பும்
பிடித்தாடிப் புலியூர்ச் சிற் றம்பலத் தெம் பெருமானைப் பெற்றா மன்றே

8–ம் திருமுறை

மாணிக்கவாசகர் திருவாசகம் ராகம் : மோகனம்
திருவாரூர்

சடையானே தழலாடீ தயங்குமூ விலைச் சூலப்
படையானே பரஞ்சோதீ பசுபதீ மழ வெள்ளை
விடையானே விரிபொழில்சூழ் பெருந்துறையாய் அடியேன்நான்
உடையானே உனையல்லா துறுதுணை மற் றறியேனே.

9–ம் திருமுறை

திருவாலியமுதனார் (திருவிசைப்பா) ராகம் : ஆனந்தபைரவி
கோயில் (சிதம்பரம்) தாளம் : ஆதி

அன்னை நடையார் அமுத மொழியார் அவர்கள் பயில் தில்லைத்
தென்னன் தமிழும் இசையும் கலந்த சிற்றம்பலம் தன்னுள்
பொன்னும் மணியும் நிரந்த தலத்துப் புலித்தோல் பியற்கிட்டு
மின்னின் இடையாள் உமையாள் கான விகிர்தன் ஆடுமே.

சேந்தனார் (திருப்பல்லாண்டு) ராகம் : பஞ்சமம்
கோயில் (சிதம்பரம்) தாளம் : ரூபகம்

மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோமுக்கு அருள்புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

10–ம் திருமுறை

திருமூலர் தேவனாயநார் திருமந்திரம் ராகம் : நீலமணி
திருவாவடுதுறை (ஆகமச்சிறப்பு) தாளம் : ஆதி

பெற்ற நல் ஆகமம் காரணம் காமிகம்
உற்ற நல் வீரம் உயர் சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமளம் ஆகும் காலோத்தரம்
துற்ற நல் சுப்பிரம் சொல்லும் மகுடமே.

11–ம் திருமுறை

காரைக்கால் அம்மையார் ராகம் : நட்டபாடை
திருவாலங்காடு மூத்த திருப்பதிகம்–1 தாளம் : ரூபகம்

துத்தங்கைக்கிள்ளை விளரிதாரம் உழைஇளி
ஒசைபண்கெழுமப்பாடிச்
சச்சரி கொக்கரை தக்கையோடு தகுணிதம்
துந்துபி தாளம் வீணை
மத்தளங்கரடிகை வன்கைமென்றோல்
தமருகங்குடமுழா மொந்தை வாசித்து
அத்தனை விரவினோடு ஆடும் எங்கள்
அப்பன் இடம் திருவாலங்காடே

12–ம் திருமுறை

சேக்கிழர் சுவாமிகள் பெரியபுராணம் ராகம் : மத்யமாவதி
சிதம்பரம் (கோயில்)

மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவுகண்டு ஆர்தல்
உண்மையாம் எனில் உலகர் முன் வருக என உரைப்பார்.

தொகுத்தளித்தவர்.
தமிழ்வேத இசைமாமணி.
ஆதிசைவ அருளிசை மணி
சிவஸ்ரீ. ப. சம்பந்தம் குருக்கள்
புதுச்சேரி.

உ

குருவருள் துணை

முகவுரை

மட்டு வார் குழலா ளொடும் மால் விடை
இட்ட மாய் உகந்து ஏறும் இறை வனார்
கட்டு நீத் தவர்க்கு இன்ன ருளே செய்யும்
சிட்டர் போலும் சிராப் பள்ளி செல்வரே

ஆன்மாக்கள் பக்தியுடன் வழிபடுவதற்காகவே இறைவன் திருவுருவந் தாங்கி ஆலயங்களில் எழுந்தருளுகின்றார். அந்த ஆலயங்களில் நடைபெறும் வழிபாடும் திருவிழாக்களும் உயிர்களை பாசமாம் பற்றறுத்துப் பதியோடு சேர்க்கின்றதான உட்பொருளைத்தான் உணர்த்துகின்றன. இறைவன் கருணையோடு உலகில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும், வீதி உலாவருகையில் தமது அருட் கண் பார்வையால் சாம்பவீ தீக்ஷையை செய்வித்து பரிபக்குவத்தை உண்டாக்குகின்றார். மலக்கட்டுகளிலிருந்து நீக்கம் பெற்று ஜீவான்மாக்கள் அனைத்தும் முக்திப்பேற்றினை அடையக்கூடிய வாய்ப்பினை ஆலயத்தில் நடத்தப்படும் உத்ஸவங்கள் நமக்கு நல்குகின்றன.

உற்சவத்தினுடைய, கொடியேற்றம் முதற்கொண்டு, சிவானந்தக் கடலில் மூழ்கித் திளைப்பதான தீர்த்தவாரி வரையில் உள்ள கிரியைகள் யாவும், இறைவனின் ஐந்தொழிலையும், சைவசித்தாந்தத்தின் முக்திநெறியான தசகார்ய ஞானதீக்ஷையையும் சைவாகமங்களால் உணர்த்துகின்றன. இதனை "த்வஜாரோஹாதி தீர்த்தாந்தம் தசகார்யமிதம் பவேத்" என்கிறது ஆகமம்.

ஆர் அறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
ஆர் அறிவார் இந்த அகலமும் நீளமும்
பேர் அறியாத பெருஞ் சுடர் ஒன்று அதின்
வேர் அறியா மைவிளம் புகின் றேனே.

என்று ஆகமப் பொருளுரைத்த திருமூலரே கூறுவாரானால் ஆகம உண்மைகளை நாம் எளிதில் புரிந்து கொள்ள முடியா? ஆயினும் ஒன்றும் புரியாமல் திருவிழாக்களை நடத்தியும் திருவிழாக்களில் கலந்து கொண்டும் இறைவனை வழிபடுவதைவிட அவ்விழாக்களின் தத்துவப்பொருளைத் தெரிந்து கொண்டு இவ்விழாக்களில் பங்கு கொள்வோமானால் நாம் பெரிதும் பயன்பெறுவோம். ஆதலால் இந்நூல் மக்களுக்கு மிகவும் நன்மைபயக்கும் என்று நம்புகிறேன். இத்தகைய நூல்கள் தற்காலத்தில் மிகமிகஅவசியமாயுள்ளன. இந்நூலில் ஆலயத்தின் பலவிழாக்களின்

சுருக்க மானவிளக்கங்களும் குறிப்பாக பவித்ரோத்ஸவத்தின் விளக்கமும் கோயில் மரபுசார்ந்த மரச்சிற்பவாகனக்கலைஞர்களின் கைவண்ணச் சிறப்புகளும், விழாக்கால வீதியுலா புறப்பாட்டுவாஹனங்களும் அவற்றின் தத்துவ வடிவவிளக்கமும், கிராமத்தின் ஒன்பதுவகைக் கோயில்களுக்கும் ஏற்றவகையில் ஆகமயானக்ரமசான்றுகளுடன் தொகுத்து, இறைவன் உண்ணின்று உணர்த்த உணர்ந்தகுறிப்புக்களையும் சேர்த்து இச்சிறு நூலை தொகுத்து எழுதி வெளியிடுகிறேன். அன்பர்கள் இதனைப்பெற்றுப் படித்துப் பெருமான் திருவருளைப் பெற்றுய்வார்களாக.

இந்நூல் வெளிவருவதற்குக் காரணமாக உள்ளவரும் எனது உற்ற நண்பருமான சென்னை ஸ்ரீலோகோஸ் இன்டர்நேஷனல் நிறுவனருமான நெசப்பாக்கம் சிவஸ்ரீ.வே. பாலகுமாரகுருக்கள் அவர்கள் தனது மகன் திருமணவிழாவில் பலர்க்கும் பயன்படும் வகையில் ஒருசிறு நூலை வெளியட எழுதித்தருமாறு விருப்பம் தெரி வித்தார். ஒரு தகுதியுமில்லாத அடியேனும் பலநூல்களில் கண்ணுற்ற செய்திகளை தொகுத்தளித்துள்ளேன். இதனை வெளியிட முன்வந்த சென்னை சிவாசார்யர் அறக்கட்டளை மற்றும் ஸ்ரீலோகோஸ் இன்டர்நேஷனல் நிறுவனத்தினருக்கும் என் நன்றி உரித்தாகுக! இந்நூலுக்கு அணிசெய்வதற்காக அணிந்துரை தந்துதவியவர்களுக்கும், ஆசியுரைதந்து ஊக்கப்படுத்திய பெரியோர்களுக்கும் விழாக்கால வாஹனபடங்கள் சுவாமிஉலா புறப்பாட்டுப்படங்கள் இவற்றைத் தந்துதவியவர்களுக்கும் எனது உளம்கனிந்த நன்றியை தெரி வித்துக் கொள்கிறேன். குறுகிய காலத்தில் தொகுத்த இந்நூலிற் காணும் குறைபாடுகளை அன்பர்கள் தெரிவிப்பார்களாயின் அவற்றை இரண்டாம்பதிப்பில் திருத்தி அமைத்துக்கொள்ள இயலும். இந்நூலில் தட்டச்சு செய்தும், அடியேன் தொகுத்தளித்த பலவகைவாகனப்படங்களை சரிசெய்து பொருத்தியும் அழகிய புத்தகமாக அமைத்தளித்த திரு.அ.கணேஷ் அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக. இந்நூலை வெளியிடும் நிறுவனங்களுக்கும் அவற்றின் குடும்பத்தினருக்கும், எல்லா நலன்களையும் அருளவேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவன் திருவடியை வாழ்த்தி வணங்குகின்றேன்.

வாழ்க அந்தனர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது எல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

இப்படிக்கு

V. சோமசேகரசிவாசார்யர் M.A.,
சென்னை–83.

உ

ஸ்ரீ அண்ணாமலையார் துணை

"சிவாகம ஞானபாஸ்கரர்" "சிவாகம செல்வர்"

"சிவாகம வாசஸ்பதி"

பட்டம். **சிவஸ்ரீ சா.ஹாலாஸ்யநாத சிவாசார்யர்**

அர்ச்சகம், அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில் – திருவண்ணாமலை

தேதி : 02.11.2021

ஆசியுரை

சிவாயருத்ராய சிவார்ச்சிதாய
மஹாநுபாவாய மகேச்வராய
ஸோமாய ஸூக்ஷ்மாய சுரேச்வராய
சோணாத்ரி நாதாய நமச்சிவாய

"ந க்ஷேத்ரம் அருணா தஸ்தி நாஸ்தி தேவோ ருணேச்வராத்
நாபி ப்ரதக்ஷிணா தந்யத் வித்யதே ப்திகம் தப :"

உலகத்தில் உள்ள அணைத்து ஜீவராசிகளும் இன்புற்று வாழ ஆலயங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. கோவில் விழாக்களில் வாஹன உலா வந்து கருணை வடிவான இறைவன் ஒவ்வொரு நாட்களிலும் காலை, மாலை இருவேளைகளிலும் பக்தர்களுக்கு காட்சிதந்து சாம்பவி தீக்ஷை அளிக்கிறார். அப்பேற்பட்ட சிறப்பான உத்ஸவ, வாஹன யானகிரமம் ஒன்பது வகையான கோயில்களுக்கும், தெய்வத்தின் வீதி உலா புறப்பாடு விதிமுறைகளை 50 வாஹன விளக்கப்படங்கள் அடங்கிய இந்த அரிய அற்புதமான நூலை சைவ சமயத்திற்கு சிவஸ்ரீ விஜய சோமசேகர சிவாச்சாரியார் அவர்கள் அளித்திருக்கிறார். அவருடைய சைவாகம தொண்டு மிகவும் போற்றுதலுக்குறியது. இந்த கிடைத்தற்கறிய பொக்கிஷமான கோயில் விழாக்களின் வாஹன உலா புத்தகத்தை ஆன்மீக அன்பர்கள் அனைவரும் பெற்று இறையருள் பெறவேண்டும். இது போன்ற பல ஆகம நூல்களையும் ஆன்மீக புஸ்தகங்களையும் மேன்மேலும் அவர் வழங்கிட நீண்ட ஆயுளுடனும், திட ஆரோக்கியத்துடனும் பல நூற்றாண்டுகள் வாழ்ந்து ஆன்மீக தொண்டுகள் புரிய எல்லாம் வல்ல என் அண்ணல் உண்ணாமுலை உடனாகிய அண்ணாமலையாரை பிரார்த்திக்கிறேன்.

அண்ணாமலையார் ஆசீர்வாதம்

வாழ்க பல்லாண்டு! வளர்க தங்கள் ஆன்மீக தொண்டு!!

இப்படிக்கு

பட்டம். சிவஸ்ரீ சா.ஹாலாஸ்யநாத சிவாசார்யர்



அருள்மிகு அவிநாசிலிங்கேசுவரர் திருக்கோயில், பஞ்சமூர்த்தி புறப்பாடு.

உ

ஜெய் குருதேவ் சிவமயம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ப்ரசன்னா

சிவாகம விசாரதா – சிவாகம பிரவீணா – சிவாகம ஞானத்திலகம்

சிவஸ்ரீ.அவிநாசி.எஸ்.சுந்தரமூர்த்தி சிவாச்சாரியார்

குருத்துவம் – முதல் ஸ்தானிகம்

அருள்மிகு அவிநாசிலிங்கேசுவரர் திருக்கோயில், அவிநாசி

முதல்வர், வேத ஆகம சம்ஸ்க்ருத மஹா பாடசாலை, ஸ்ரீ ஸ்ரீ குருகுலம்,

வேத விஞ்ஞான மஹா வித்யா பீடம்,சர்வதேச வாழும் கலை மையம், பெங்களூரு.

A.S.Sundara Murthy Sivam,

PRINCIPAL, VEDA AGAMA SAMSKRUTHA MAHA PATASHALA, THE ART OF LIVING INTERNATIONAL CENTRE,

SRI SRI GURUKULAM, 21ST KM, KANAKAPURA ROAD, UDAYAPURA, BENGALURU - 560 082

Contact: 080 67262851, 9008499833, E-Mail: srisrigurukulinfo@gmail.com/ assmsivam20@gmail.com

உ 06.11.2021

ஸ்ரீ குருப்யோ நமஹ

கோயில் விழாக்களின் வாஹனஉலா (ஆலய உத்ஸவ வாஹன யானக்ரமம்)

நூல் வெளியீட்டு விழா

பிலவ வருடம், ஐப்பசி மாதம் 29–ம் நாள், திங்கட்கிழமை (15.11.2021)

||அணிந்துரை||

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடிபூசி என் உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே.

– சீர்காழி, திருஞானசம்பந்தர் தேவாரம், திருமுறை – 01

எல்லாம் வல்ல உமையொருபாகனின் திருவருள் துணைகொண்டு, நமது அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய, SRI LOGOS INTERNATIONAL நிறுவனத்தின் ஸ்தாபகர் ஆலய நிர்மானக்கலை வித்வான் சிவஸ்ரீ S. பாலகுமார் குருக்கள் அவர்களின் மகன் திருநிறைச்செல்வன் **B. வேதேஸ்வரன்** சௌபாக்யவதி **K. ஸ்ரீ ஹரிணி** இவர்களின் **திருமணவிழாவானது,** ப்லவ வருடம், ஐப்பசி மாதம் 29–ம் நாள், திங்கட்கிழமை (15.11.2021) அன்று நடைபெறுவது மகிழ்ச்சியை அளிக்கிறது. திருமணவிழாவில், **கோயில் விழாக்களின் வாஹனஉலா (ஆலய உத்ஸவ வாஹன யானக்ரமம்)** என்ற

நூலை, ஒன்பது வகைக் கோயில்களின் தெய்வவிழாவின் வீதி உலா, சுவாமி புறப்பாடு ஆகம விதிமுறைகள், கோயில் திருவிழாக்கள் - பன்னிரு திருமுறைகளில் கோயில் விழாக்குறிப்புகள் முதல் பாகத்தில், இடம் பெற்றிருக்கிறது. இரண்டாம் பாகத்தில், வாகன அமைப்பு முறைகள் - தேர், பல்லக்கு, சகடை போன்ற வாகனங்களின் ஆக்கும் வகைமுறை தொடங்கி உத்ஸவ வகைகளின் பயன் வரை அடங்கியுள்ளது. மூன்றாம் பாகத்தில், நாம் வணங்கிவருகின்ற தெய்வங்கள் விநாயகர் முதல் கிராம தேவதைகள் வரையிலான கோயில் திருவிழாக்களின் புறப்பாட்டிற்கு ஏற்ற வாகனங்கள் வரை அனைத்து விஷயங்களையும் இணைத்து உள்ளடக்கிய நூலை வெளியிட உள்ளனர்.

பிரசித்தி பெற்ற தொண்மையான - திருவண்ணாமலை முதலிய கோவில்களின் மஹோத்ஸவம் மற்றும் மாத சிறப்பு விழாக்களில் வாஹனங்களிலே சுவாமி புறப்பாடு செய்கிறார்கள். தேர் முதலிய வாஹனங்களை, சைவ தர்மம் காக்கும் நகரத்தார் பெருமக்கள் உபயமாக செய்து கொடுத்து - திருவிழா கட்டளை பூஜைகளையும் இன்றளவும் சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

இந்நூலினை மிக அற்புதமாக தொகுத்து நமது சைவ பெருமக்கள் அனைவரும் பயன்பெறும் வண்ணம், மதிப்பிற்குரிய ஆகம ப்ரவீணர், வ்யாகரண சிரோமணி, வேத ஆகம சாஸ்த்ர பல்கலை பேராசிரியர், **சைவாகம ஸ்ரீ Dr. சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாசார்யார்** அவர்களின் சீரிய முயற்சியால் மற்றும் **சிவாசார்யர் அறக்கட்டளை, சிவஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யார் அறக்கட்டளை & ஸ்ரீ லோகோஸ் இன்டர்நேஷனல் நிறுவனத்தின்** மூலமாகவும் இந்நூலினை வெளியிடுவது மிக்க மகிழ்ச்சியை அளிக்கின்றது. மேலும் இத்திருமண விழா தம்பதியினர் திருநிறை செல்வன் **B. வேதேஸ்வரன்** சௌபாக்கியவதி **K. ஸ்ரீ ஹரிணி** மற்றும் அவர்களுடைய குடும்பத்தினரும் எல்லா நலன்களும் பெற எமது ப்ராத்தனா தெய்வமாக விளங்கக் கூடிய எல்லாம் வல்ல பெருங்கருணைநாயகி உடனமர் அவிநாசிலிங்கேஸ்வர பெருமானை ப்ராத்திக்கிறேன்.

நன்றி - வணக்கம்

பிலவ வருடம்,
ஐப்பசி - 19
06.11.2021
சனிக்கிழமை

இப்படிக்கு,
A. S. சுந்தரமூர்த்தி
அவிநாசி. எஸ். சுந்தரமூர்த்தி சிவாசார்யர்
முதல்வர், வேத ஆகம ஸம்ஸ்க்ருத மஹா பாடசாலை,
பெங்களூரு, கர்நாடகா– 560 082.

!! மேன்மை கொள் சைவநீதி !!   !! விளங்குக உலகமெல்லாம் !!

2   VARC/VASMP/SSG/06.11.2021

உ

வாழ்த்துரை

இறைநேயர்காள்! வணக்கம்.

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன் நெடுங்காலமே (அப்பர்)

உலகில் உயிர்களை உய்வித்திட இறைவன் கோயிலில் இருந்தருள்கிறார். ஊர்மக்கள் தினமும் இயன்றபொழுதில் ஆலயம் சென்று தொழுதேத்தி வினைகளைப் போக்கி அருள்பெறுகின்றனர். கோயில் திருவிழாக்காலத்தில் இறைவன் ஊர்வலம்வந்து ஊரார்முன் வீதியில் அடியார்களின் வீட்டருகே எழுந்தருள்கிறார் என்பதே தனிசிறப்பு. நாளொருமேனி ஒப்பனையுடன், உரியதோர் ஊர்த்தியில் புறப்பாடாகி வீதியில் பவனிவருதல். கண்கொள்ளாக் காட்சியாகும். பக்திரஸத்தில் திளைத்து இறைவனைக் கொண்டாடும் இவ்விழாக்களின் வாஹனபுறப்பாட்டு முறையானது, ஆகமநூல்கள், தலவரலாறுகள், ஊர்மரபுகள் இவற்றால் வேறுபடும். இருபதுவகையான விழாக்களையும் தத்வார்த்த சிறுவிளக்கத்துடனும் ஒன்பதுநாள் பெருவிழாவிற்கு ஏற்ற பல்லக்கு, விமானம் முதலிய புறப்பாட்டு ஸாதனங்களையும், பெருந்தேர் மற்றும் வாகனங்களின் சிற்பக்கலைச் சிறப்புகளையும், அதன் நுட்பங்களையும், அவற்றின் பெருமைகளையும் வருங்கால ஸந்ததியினருக்கு எடுத்துச்சொல்லியும், தக்கபடங்கள் மூலம் காட்சிப்படுத்தியும் இந்துஸமய கலாசார நிகழ்வுகளை எடுத்துரைத்தும் இந்நூலில் எமது குருநாதர் நன்கு பதிவு செய்துள்ளார்கள். இதில் சிறப்பாக பவித்ரோத்ஸவம் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் எக்காலத்திற்கும் தத்தமது கிராமத்தி லிருக்கும் முக்கியமான ஒன்பதுவகை கோயில்களையும், அவைகளின் தெய்வவிழாக்களுக்கு ஏற்ற புறப்பாட்டுமுறைகளையும் சான்றுடன் அட்டவணையிட்டு விளக்கியிருப்பது இந்நூலின் சிறப்பம்சமாக உள்ளது.

எங்களது குருநாதரும், சிவாகமபண்டிதரும், எங்களது அறக்கட்டளையின் கௌரவஆலோசகரும், மார்கதர்சியுமான

சிவஸ்ரீ.வி.சோமசேகர சிவாசார்யார் அவர்கள் என்றென்றும் பலருக்கும் பயன்தரும் வகையில் எழுதித்தொகுத்து வெளியிடும் இந்நூல் அறுசமய நீதிநெறியில் வாழ்வோருக்கும் அரியநூலாகும் என்பதில் ஐயமில்லை. மக்கள் தாமாகவே முன்வந்து பலவழிமுறைகளில் விழாக்களில் பங்குபற்றி பயன்பெறுவதற்கு வீதிஉலா பெரிதும் உதவுவதாகும். திருவிழா வீதிஉலாவில் சுவாமியை பக்தர்கள் பின்தொடர்தல், துதிபாடுதல், தாங்குதல், வடம்பிடித்தல், வழிபடுதல், போற்றுதல் முதலியவற்றால் யாவரும் பயனடைய வாய்ப்ளிப்பதே திருவிழாவாகும் அத்தகைய திருவிழாவின் தத்துவப்பொருள் மற்றும் நோக்கம், பயன் இவற்றை அறிந்து ஸேவித்தல் நமக்கு நிறைவான பயனளிக்கும். இதற்கு இந்நூல் உதவுமென்பது உறுதி. இந்நூலை சமய உலகிற்கு அளித்த நூலாசிரியரை வணங்கி, இந்நூல் வாசகர்கள் என்றும் பயனுற யாம் தேவி காளிகாம்பாளின் திருவருளை இறைஞ்சி சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சிவாசார்யர் அறக்கட்டளை
நிறுவனர்
சிவஸ்ரீ. காளிதாஸ் சிவாசாரியார்.
சென்னை–01



உ
ஸ்ரீ காளிகாம்பாள் துணை
வேதாந்த சிரோமணி, வேதாந்த விசாரதா
முனைவர் தி.ஸா.ஷண்முக சிவாசார்யர், M.A., Ph.D.,
66/101, இராமசாமி தெரு, மண்ணடி, சென்னை - 600 001, தமிழ்நாடு, இந்தியா
Dr. T.S. Shanmukha Sivacharyar, M.A., Ph.D.,
66/101, Ramaswamy Street, Mannady, Chennai - 600 001.

மகிழ்வுரை

எல்லாம் வல்ல பரம்பொருளின் பரம கருணையினால் எங்களது குருநாதர் சிவஸ்ரீ வி. சோமசேகர சிவாசார்யர் அவர்களின் அனுக்ரஹத்தினால் பல அரிய நூல்கள் நமது சனாதன தர்மத்தின் சாரமாக எளிய முறையில் அளிக்கப்பட்டு வருகிறது. அவ்வரிசையில், கோயில் விழாக்களில் வாஹன உலா எனும் இந்த நூல் மூலம், அனைத்து ஆலயங்களிலும் வருடம்தோறும் நடைபெறக்கூடிய உத்ஸவங்களை பற்றிய குறிப்புகளும் குறிப்பாக வாஹனங்கள் என்றால் என்ன, எந்த வரிசையில் பயன்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு தெய்வங்களுக்கு உரிய வாஹனங்கள் எவை என்பதையெல்லாம் தக்க ஆதாரங்களுடனும், அவற்றை எப்படி அமைக்க வேண்டும், எப்படி கொண்டாட வேண்டும் என்பனவற்றையும் சிறப்பாக குருநாதர் அவர்கள் தொகுத்து அளித்திருக்கிறார்கள்.

இந்த நூலை "ஸ்ரீ லோகோஸ் இன்டர்நேஷனல்" நிறுவனமும் சிவாசார்யர் அறக்கட்டளையும் இணைந்து சிரஞ்சீவி செந்தூரன் என்ற வேதேஸ்வர சர்மா மற்றும் சௌபாக்கியவதி ஸ்ரீ ஹரினி அவர்களின் திருமணத்தின் போது வெளியிடுவது மிக்க மகிழ்ச்சியை அளிக்கிறது.

குருநாதர் அவர்கள் இது போன்று பல நூல்களை ஆன்மீக உலகத்திற்கு அளித்து நம்மை வழிகாட்டுமாறு பிரார்த்திக்கிறோம். "ஸ்ரீ லோகோஸ் இன்டர்நேஷனல்" உலகம் முழுவதும் கலாச்சார நினைவுகளை ஸ்தாபனம் செய்து தொண்டாற்றி வருகிறது. இந்த நிறுவனத்தின் தொண்டு மென்மேலும் வளர எல்லாம் வல்ல பராசக்தி காளிகாம்பிகையை பிரார்த்திக்கிறேன்.

ப்லவ வருடம்
ஐப்பசி மாதம் 22ஆம் நாள்
சதுர்த்தி / மூலம்
08/நவம்பர் / 2021

ஜெய்ஹிந்த்!

அண்ணாமலையார் அடிமை!
ஷண்முக சிவாசார்யர்

PLAEIDES
knowledge ventures

Dr. Deepa Duraiswamy
deepa.duraiswamy@gmail.com

உ
சிவமயம்

மதிப்புரை

உலகமக்கள் அனைவரும் தொன்றுதொட்டு போற்றும் பாரத நாட்டின் ஆன்மீக தலைமையின் கருப்பொருளாக, ஆலயங்கள் பல்லாயிரம் ஆண்டுகளாகத் திகழ்ந்து வருகின்றன. அவ்வாலயங்களில் கர்ப்பக்ருஹங்களில் ஆசார்யர் அழைத்தவாறு குடிகொண்டு கோலோச்சும் தெய்வங்கள் ப்ரஹ்மோத்சவ காலங்களில் பல்வேறு வாகனங்களில் ஏறி வெளிவந்து, தம் கிராமத்தை வலம் வந்து, தம் மக்களிடையே அருள்பாலித்து மகிழும் மகத்தான நிகழ்வுகள் இன்றும் இந்நாட்டிற்கு ஆன்மீக உயிரூட்டுகின்றன.

அப்படி ஒரு சிறு கோவிலே நகர்ந்து வருவது போல பிரமிப்பூட்டும் வாகனங்கள் ஒவ்வொன்றிற்கும் பல தத்துவ உள்கருத்துக்கள் உள்ளன. நம் சமயத்தில் காரணம் இல்லாமல் காரியம் இல்லை என்று பெரியவர்கள் அடிக்கடி கூறுவது போல, ஏதோ அழகு பொம்மை வண்டிகளாக இல்லாமல் ஆழ்ந்த அர்த்தமும் ஒவ்வொன்றும் தனிப்பட்ட பலனும் தருபவை.

அதனால் தான் இன்றும் மக்கள் "காளிகாம்பாள் கிண்ணித் தேர் பார்க்க வேண்டும், திருமழிசை அதிகார நந்தி பார்க்க வேண்டும், மயிலாபுரி அறுபத்து மூவர் உத்சவம் பார்க்க வேண்டும்!" என்று தனித்தனியாக ரசித்து அனுபவிக்கிறார்கள்.

அந்த சிவாநுபவத்தை உருவாக்குவதே உத்சவங்களில் தலையாய நோக்கம் என்றால் அந்நோக்கம் நிறைவுற முக்கிய அங்கம் வகிப்பவை உத்சவ வாகனங்கள் என்று கணிக்க முடிகிறது.

அவ்வகையில் நம் கலங்கரை விளக்காம், அமுதசுரபியாம், பெருமதிப்பிற்குரிய அண்ணா அவர்கள் நமக்கு அளிக்கும் இன்னொரு அமுதம், உத்சவ வாகனங்களைப் பற்றிய இந்த நூல்.

அதுவும் எனது தாத்தா திருமழிசை ஸ்வர்க்கஸ்ரீ சச்சிதானந்த சிவாசாரியர் அடிக்கடி மேற்கோள் காட்டும் "தங்கத்தாமரை வாசனை உடைத்தாக" ஆனது போல, அரிய பொக்கிஷமான இந்நூல், தம்பி வேதேஸ்வரன் - ஸ்ரீ ஹரிணி அவர்களின் திருமண வைபவத்தில் வெளிவருவது, மணமக்களுக்கு பெரும் பாக்கியம், சிவபிரசாதம்.

மணமக்களை வாழ்த்தி மகிழ்ந்து நாம் அனைவரும் இந்நூலை கற்றுய்ய திருவருள் கூடுமாறு பரம்பொருளை வேண்டிக்கொண்டு, இவ்வரிய திருநாளில் அண்ணாவின் திருப்படைப்பில் அடியேனும் சிறியதோரு பங்கேற்று புளகாங்கிதம் அடையுமாறு வழி செய்த, விழாநாயகனின் நாயகர் ஸ்ரீ லோகோஸ் நிறுவனர் சிவஸ்ரீ பாலகுமார் சித்தப்பா - சித்தி அவர்களை நமஸ்கரித்து அவர்கள் சிவத்தொண்டு நூற்றாண்டு காண அன்னை காளிகாம்பாளை வேண்டுகிறேன்.

ஹர ஹர.

தீபா

Chennai 600093.
06 November 2021

Sri LOGOS INTERNATIONAL

No. 14, First Cross Street,
6th Kanaka sabai Street,
Dr. Kanu Nagar, Nesapakkam,
Chennai-78.
Cell : 9003113311 / 9003114444

பதிப்புரை

எங்களின் ஸ்தாபனம் :

எல்லாம் வல்ல பரம்பொருளின் பெருங்கருணையினால் "ஸ்ரீ லோகோஸ் இன்டர்நேஷனல்" எனும் பெயர்கொண்ட எமது ஸ்தாபனம் சுமார் 30 வருடங்களுக்கு முன்னால் உருவாகியது. குடந்தை நகரை பூர்வீக வம்சாவளி பெருமை கொண்டவரும் இலங்கை மலேசியா மற்றும் சிங்கபூரில் பல கோவில்கள் உருவாக உறுதுணையாக இருந்து திரை கடல் ஓடி திரவியம் பல சேர்த்து, யாழ்பாணம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலை புனருத்தாரணம் செய்து முதன்மை அர்ச்சகராக மிளிர்ந்தவருமான எனது தாத்தா சு. வேதாராண்யேஸ்வர குருக்கள் அவர்களின் ஆக்கமும் ஊக்கமும் ஒருசேரப் பெற்ற எனது தந்தையார் வே. சிவசுப்பிரமணிய குருக்கள் அவர்களின் சிற்பசாஸ்திர புலமையும், அவர்கள் கை வண்ணத்தில் உருவான பல உயிரோவியங்களும் எம்மை இத்துறையில் ஈர்த்தது எமது பூர்வஜென்ம பந்தமே.

மேலும் எனது மாமனாரும் சென்னையின் அன்னை "ஸ்ரீ காளிகாம்பாளின்" தவப் புதல்வருமான "சிவாசார்ய குல பூஷணம்" தி.ஷ. சாம்பமூர்த்தி சிவாசார்யர் அவர்களின் வழிகாட்டுதலும், அவர்தம் புதல்வர்களின் பக்கபலமும், எம்மை இத்துறையில் ஏற்றம் பல காண வைத்தது என்றால் மிகையாகாது.

மேலும் சிவஸ்ரீ விஜய சோமசேகர சிவாசார்யர் அண்ணா அவர்கள் ஆகம பண்டித் மட்டும் அல்லாமல் சில்ப சாஸ்திரத்தில் ஆழ்ந்த புலமையுடைய வித்தகர், எமது உற்ற நட்பாகவும் ஆகம விதிகளின்படி வழிகாட்டும் குருவாகவும் இருப்பது நமக்கு கிடைத்த அரும்பெரும் பொக்கிஷமாகும். "ஸ்ரீ அண்ணா" அவர்களின் இவ்வரிய நூலினை, வெளியிடுவதற்கு எமக்கு வாய்பளித்தமை யாம் பெற்ற பெரும் பேறாகும். சில்பதுறையில் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக திருக்கோவில் கட்டுமானங்களை உள்ளூரில் மட்டுமல்லாது பற்பல வெளிநாடுகளிலும் குறிப்பாக அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் சவுத் ஆப்பிரிக்கா, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் இலங்கையிலும் இறைவன் கருணையினால் நிர்மாணம் செய்துள்ளோம். சிலா விக்ரகங்கள், ஐம்பொன் விக்ரகங்கள், ஆபரணங்கள் கவசம் மற்றும் திருக்கோவிலுக்கு தேவையான சகல உபகரணங்களுடன், ராஜகோபுரம் முதலான திருக்கோவில் வடிவமைப்பு, வாகனங்கள் தேர் முதலியவற்றை பாரம்பரியமான முறைகளில் மட்டுமல்லாது, நவீன தொழில்நுட்பத்துடன், வெளிநாடுகளின் சீதோஷண நிலைக்கு ஏற்றவாறும், இன்றியமையாத தேவைகளின் அடிப்படையில் நிலநடுக்கம் உட்பட்ட பேரிடர்களை தாங்கும் வகையிலும் தகுந்த முறையில் தயாரித்து ஏற்றுமதி செய்தும் மற்றும் கோவில் திருப்பணி நிர்மாணமும் செய்து வருகின்றோம்.

இந்த துறையின் சம்பந்தப்பட்டதான "கோயில் விழாக்களின் வாஹன உலா" என்ற இவ்வரிய நூலினைத் தொகுத்து வழங்கிய "ஸ்ரீ அண்ணா" அவர்களுக்கு பல கோடி நமஸ்காரங்களை சமர்ப்பித்து, ஆன்மீக அன்பர்கள் அனைவருக்கும் தேவையான தகவல் களஞ்சியமான இந்நூலினை பதிப்பித்து வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

"மேன்மை கொள் சைவநீதி விழங்குக உலகமெல்லாம்"

அன்பன்,
சிவ. பாலகுமார் குருக்கள்
நிறுவனர் - ஸ்ரீ லோகேஸ் இன்டர்நேஷனல்

சென்னை - 600 078.
15.11.2021

இந்நூலை எங்களது
முன்னோர்களுக்கு சமர்ப்பிக்கிறோம்

கலைத்தாய்

ஓவியர் வே. சிவசுப்பிரமணிய குருக்கள்



தாத்தா / பாட்டி

சு. வேதாரண்யேஸ்வர குருக்கள்

வீணாவாத விதூஷிணி அம்மாள்

பெற்றோர்கள்

வே. சிவசுப்பிரமணிய குருக்கள்

புவனேஸ்வரி அம்மாள்

Sri LOGOS
INTERNATIONAL

90031 13311, 900311 4444

mail@srilogos.com

www.srilogos.com

சிலா விக்ரஹங்கள்



Sri LOGOS
INTERNATIONAL

90031 13311, 900311 4444

mail@srilogos.com

www.srilogos.com

ஐம்பொன் விக்ரஹங்கள்



Sri LOGOS
INTERNATIONAL

90031 13311, 900311 4444

mail@srilogos.com

www.srilogos.com

திருக்கோவில் நிர்மாணம்

Sri LOGOS INTERNATIONAL

90031 13311, 900311 4444

mail@srilogos.com

www.srilogos.com

திருக்கோவில் நிர்மாணம்



Sri LOGOS INTERNATIONAL

90031 13311, 900311 4444

mail@srilogos.com

www.srilogos.com

வாகனங்கள்

Sri LOGOS
INTERNATIONAL

90031 13311, 900311 4444

mail@srilogos.com

www.srilogos.com

வாகனங்கள்





Sri LOGOS
INTERNATIONAL

90031 13311, 900311 4444

mail@srilogos.com

www.srilogos.com

திருக்கோவில் சுதை விக்ரஹங்கள்



உ
நமச்சிவாய்யாம்

கோயில்விழாக்களின் வாஹனஉலா
(ஆலய உத்ஸவ வாஹன யானக்ரமம்)

பொருளடக்கம்

வ. எண்.	விவரம்	பக்கம்
1.	பன்னிரு திருமுறைகளில் கோயில்விழாக்கள்	31
2.	கோயில்விழாக்கள் இருபது வகைகள்	38
	1. நித்திய உற்சவம் (தினசரி பூசைமுடிவில் மூன்றுவேளை செய்யப்படுவது)	39
	2. பஞ்சபர்வ உற்சவம் (மாஸோத்ஸவம்)	39
	3. நைமித்திகம் (காரணம் பற்றி செய்யப்படுவது).	39
	4. காம்ய உற்சவம் (வேண்டுத்தல் விரும்பி செய்யப்படுவது)	39
	5. பிரம்மோற்சவம் (ஒன்பதுநாள் மஹோத்ஸவம் – பெருவிழா)	39
	6. விநாயகர் சதுர்த்தி விழா:	41
	7. முருகப்பெருமான் கார்த்திகை, சஷ்டி விழாக்கள்	41
	8. தேவி ஆடிப்பூர விழா	41
	9. தேவி நவராத்திரி விழா	41
	10. அன்னாபிஷேக விழா	42
	11. தெப்போற்சவம் (உடுபாரோஹன உத்ஸவம்)	43
	12. வசந்தோற்சவம் (கொடிமண்டப விழா)	43
	13. விடாய் ஆற்றி உற்சவம்	43
	14. மெத்தை உற்சவம் (கமனோத்ஸவம்)	44
	15. பிரதோஷ உற்சவம்	44
	16. பவித்ராரோபண உற்சவம்	45
	பவித்ராரோபண காலம்	
	பவித்ரமாலை இலக்கணம்	
	பவித்ரதானம் நித்யாங்கம்	
	பவித்ரோத்ஸவதிரவியங்கள்	
	17. ஊஞ்சல் உற்சவம் (டோலோத்ஸவம்)	51
	18. புண்யகால உற்சவம் (சிறப்பு புனிதகால உற்சவம்)	51
	19. வாரோத்ஸவம் (கிழமைகளின் விழா)	52

20. பிரதிஷ்டோத்ஸவம் 52
(கும்பாபிஷேகதின நிலைநிறுத்திய நாள்விழா)
21. கல்யாண உற்சவம் (தெய்வத்திருமண விழா)........................ 52
22. தீர்த்த உத்ஸவம் (ஒரு புனிதநிராட்டு விழா) 52
23. பக்தோத்ஸவம் (தெய்வத்திருத்தொண்டர்கள் விழா) 52

3. ஆலயவிழா சிறப்பு 53

4. பத்துநாள் உற்சவதத்துவ விளக்கம் 54

5. விழா வகைகளின் பயன்கள்.. 55
சூக்ஷ்மாகமப்படி உத்ஸவ தினங்கட்குப்பலன்
காமிகாகமப்படிப் பலன்கள்
அயனம் முதலிய உற்சவபலன்

6. விழாக்கால வேள்விச்சிறப்பு 56

7. கோயில்விழா தெய்வப்புறப்பாட்டு விதிமுறைகள் 62

8. தெய்வங்களின் ஊர்வலத்தின் பயன்கள்.................................. 67

கிராமத்தின் ஒன்பதுகோயில் விழாக்கள்

9. விநாயகர்கோயில் திருவிழா (கோயில்–9ல்–1) 68
விநாயகர் துதி
விழாவாகன புறப்பாட்டுவிதி ஆகமசான்று
மூஷிகவாகனப் பெருமை (தத்துவம்)
மூஷிகவாகன வடிவமைப்பு
மூஷிகவாகனாரூடர் துதி
விழாபுறப்பாட்டு வாகனமுறைகள் (அட்டவணைகள்)
விநாயகருக்கு ஏற்ற வாகனங்கள்
விழாத்தெய்வத்தின் வீதிஉலாகாட்சிகள்

10. ஈச்வரன்கோயில் திருவிழா (கோயில்–9ல்–2)............................ 78
ஈச்வரன் துதி
விழாவாகன புறப்பாட்டுவிதி ஆகமசான்று
நந்திவாகனப் பெருமை (தத்துவம்)
நந்திகவாகனப் வடிவமைப்பு
நந்திவாகனாரூடர் துதி
விழாபுறப்பாட்டுமுறைகள் (அட்டவணைகள்)
சிவபெருமானுக்கு ஏற்ற வாகனங்கள்
விழாத்தெய்வத்தின் வீதிஉலாகாட்சிகள்

11. பார்வதிதேவீகோயில் திருவிழா (கோயில்-9ல்-3) 96
பார்வதி துதி
விழாவாகன புறப்பாட்டுவிதி ஆகமசான்று
அன்னவாகனப் பெருமை (தத்துவம்)
அன்னகவாகனப் வடிவமைப்பு
அன்னவாகனாரூடர் துதி
விழாபுறப்பாட்டுமுறைகள் (அட்டவணைகள்)
பார்வதிதேவீக்கு ஏற்ற வாகனங்கள்
விழாத்தெய்வத்தின் வீதிஉலாகாட்சிகள்

12. சுப்ரமண்யர்கோயில் திருவிழா (கோயில்-9ல்-4).................... 109
சுப்ரமண்யர் துதி
விழாவாகன புறப்பாட்டுவிதி ஆகமசான்று
மயில் வாகனப் பெருமை (தத்துவம்)
மயில் வாகனப் வடிவமைப்பு
மயில் வாகனாரூடர் துதி
விழாபுறப்பாட்டுமுறைகள் (அட்டவணைகள்)
சுப்ரமண்யருக்கு ஏற்ற வாகனங்கள்
விழாத்தெய்வத்தின் வீதிஉலாகாட்சிகள்

13. விஷ்ணுபெருமாள்கோயில் திருவிழா (கோயில்-9ல்-5) 119
விஷ்ணுபெருமாள் துதி
விழாவாகன புறப்பாட்டுவிதி ஆகமசான்று
கருட வாகனப் பெருமை (தத்துவம்)
கருட வாகனப் வடிவமைப்பு
கருட வாகனாரூடர் துதி
விழாபுறப்பாட்டுமுறைகள் (அட்டவணைகள்)
விஷ்ணுபெருமாளுக்கு ஏற்ற வாகனங்கள்
விழாத்தெய்வத்தின் வீதிஉலாகாட்சிகள்

14. மாரியம்மன்கோயில் திருவிழா (கோயில்-9ல்-6).................... 128
மாரியம்மன் துதி
விழாவாகன புறப்பாட்டுவிதி ஆகமசான்று
சிம்ம வாகனப் பெருமை (தத்துவம்)
சிம்ம வாகனப் வடிவமைப்பு
சிம்ம வாகனாரூடர் துதி
விழாபுறப்பாட்டுமுறைகள் (அட்டவணைகள்)
மாரியம்மனுக்னு ஏற்ற வாகனங்கள்
விழாத்தெய்வத்தின் வீதிஉலாகாட்சிகள்

15. காளியம்மன்கோயில் திருவிழா (கோயில்-9ல்-7) 137
காளியம்மன் துதி
விழாவாகன புறப்பாட்டுவிதி ஆகமசான்று
பூதகி வாகனப் பெருமை (தத்துவம்)
பூதகி வாகனப் வடிவமைப்பு
பூதகி வாகனாருடர் துதி
விழாபுறப்பாட்டுமுறைகள் (அட்டவணைகள்)
காளியம்மனுக்கு ஏற்ற வாகனங்கள்
விழாத்தெய்வத்தின் வீதிஉலாகாட்சிகள்

16. சாஸ்தா ஐயனார்கோயில் திருவிழா (கோயில்-9ல்-8) 145
சாஸ்தா துதி
விழாவாகன புறப்பாட்டுவிதி ஆகமசான்று
யானை வாகனப் பெருமை (தத்துவம்)
யானை வாகனப் வடிவமைப்பு
யபனை வாகனாருடர் துதி
விழாபுறப்பாட்டுமுறைகள் (அட்டவணைகள்)
சாஸ்தா ஐயனாருக்கு ஏற்ற வாகனங்கள்
விழாத்தெய்வத்தின் வீதிஉலாகாட்சிகள்

17. துர்க்கையம்மன் கோயில் திருவிழா (கோயில்-9ல்-9) 155
துர்க்கையம்மன் துதி
விழாவாகன புறப்பாட்டுவிதி ஆகமசான்று
புலி வாகனப் பெருமை (தத்துவம்)
புலி வாகனப் வடிவமைப்பு
புலி வாகனாருடர் துதி
விழாபுறப்பாட்டுமுறைகள் (அட்டவணைகள்)
துர்க்கையம்மனுக்கு ஏற்ற வாகனங்கள்
விழாத்தெய்வத்தின் வீதிஉலாகாட்சிகள்

18. பக்தோற்ஸவம். (கோயில்களின் தெய்வஅடியார்கள் திருவிழா).......160

19. ஆசார்யஉற்சவம் (விழாநடத்திய ஆசானை கௌரவித்தல்) 162

20. ஆலய திருவிழாக்களும் வாஹனங்களும்..............................163

21. தெய்வங்களும் உரிய வாகனங்களும் 164

வாகனஅமைப்பு முறைகள்

22. தேர்பவனி முறை (ரதோத்ஸவம்) 166

23. பல்லக்கு புறப்பாட்டுமுறை 167

24. பட்டரை வண்டி பயன்பாட்டுமுறை....................167

25. வாகனபீடத்தின் முக்கியத்தேவை....................168

26. வாஹனங்கள் ஆக்கும்வகைமுறை 168
(இதனை ஏழுவகையில் காணலாம்)

27. வாகனத்தின் மூலப்பொருள்கள் 169

28. வாகனத் தயாரிப்புமுறைகள் 170

29. உலோகத்தகட்டு வாகனம் 170

30. சுதாவாஹனம் (சுவர்சிற்பம்) 171

31. சிலாவாஹனம் (கற்சிற்பம்)....................171

32. சுடுமண்வாஹனம் (மண்சிற்ப நிலைப்பு வகை)....................172

33. வாகனமரங்களின் இயல்பும் தேர்வும்....................172

34. வாகனத்திற்கு ஏற்கத்தக்க மரவகை 172

35. நீக்கத்தக்க மரக்குற்றங்கள்....................173

36. மரத்திற்கு அமைந்த இயல்பு நலன்கள்....................174

37. வாகனஅடிப்படை அமைப்புவகை 174

38. இருவகைத் தோற்றத்தில் வாகனங்கள் 175
இயல்பானமுறை
கலைநயமுறை

39. வாகன தச்சுக்கலைமுறை (நால்வகையில்)....................176

40. வாகன வண்ண ஒப்பனை (வண்ணம் தீட்டல்) 176

41. கண்ணாடிபதிப்பு ஒப்பனைமுறை 176

கோயில்களின் விழாவிற்கான பொதுவான வாகனவகைகள்

42. நந்திதேவர் வாகனம் (எருதுமுகத்தேவர்) 178

43. காமதேனு (தெய்வீகப்பசு) 180

44. கற்பகத்தருவாஹனம் (கற்பக மரம்) 182
45. பத்மபீடம் 186
46. கிளிவாகனம் (சுகவாகனம்) 187
47. சேஷவாகனம் / நாகவாகனம் 189
48. யாளிவாகனம் 193
49. கைலாசகிரிவாகனம் 195
50. பூதவாகனம் 200
51. சூரியப்பிரபை வாகனம் 203
52. பாயுங் குதிரை வாகனம் 205
53. சூரவாகனம் (அசுரவாகனம்) 209
54. சந்திரபிரபை வாகனம்....211
55. அனுமந்தவாகனம் (ஆஞ்சநேயர்)....214
56. ஆடு வாகனம் (மேஷவாஹனம் / அஜவாகனம்)....216
57. புருஷாமிருகவாகனம் (வியாக்ரபாதமுனிவர்) 217
58. தண்டிகை (சிறுபல்லக்கு / தூக்குதண்டிகை) (ஆந்தோளிகா) ..219
59. பல்லக்குவாகனவகை 220
60. சப்பரம் (கட்டுசப்பரவாகனம்) (பர்ணசாலா / சாலாகாரம்).... 224
61. விமானம் (சவுடல் விமானம்) 226
62. மஞ்சம் (பர்யங்கம் / கட்வா) எடுப்புத்தொட்டி.... 229
63. சிம்மாசனம் (அரசு அரியணை) 231
64. ரதம் (லகு ஸ்யந்தனம்).... 234
65. தேர் (மஹாரதம் / பெருந்தேர்) 236
66. வாகனமும் ஏற்கும் தெய்வங்களும் 240
67. தமிழிலக்கியத்தில் தெய்வ வாகனக்குறிப்பு (தொல்லியல் மரபு) 243
68. ஆலயமஹோத்ஸவத்தால் ஏற்படும் சமூகப்பயன்கள் 245
69. கோயில் தெய்வங்களின் ஊர்வலதின் பயன்கள் 246
70. கோயில் உற்சவத்தில் சுவாமிதரிசனத்தின் பயன்கள் 247

உ

திருச்சிற்றம்பலம்



கோயில் திருவிழாக்கள்

தமிழ்மறை பன்னிரு திருமுறைகளில் திருவிழாக்குறிப்புகள்

தமிழ்மறையெனும் பன்னிருதிருமுறைப் பாடல்கள் பலவும் பலவகையான திருவிழாக்களைக் குறிப்பிடுகின்றன. அவற்றுள் எடுத்துக்காட்டாக சில பாடல்கள் கூறுவனவற்றைக் காண்போம்.

திருஞானசம்பந்த சுவாமிகள் திருவிடைமருதூர்பதிகத்தில் கூறுவது,

வாசங் கமழ்மா மலர்ச்சோ லையில் வண்டே
தேசம் புகுந்தீண் டியொர்செம் மையு டைத்தாய்ப்
"பூசம் புகுந்தா டிப் " பொலிந் தழ காய
ஈச னுறை கின் ற விடை மரு தீதோ.

சென்னையில் மயிலாப்பூர்பதிகத்தில், திருஞானசம்பந்தர் கூறும் பலதிருவிழாக்கள்.

2-ந் திருமுறை

பூம்பாவைத் திருப்பதிகம்

மட்டு இட்ட புன்னை அம்கானல் மடமயிலைக்
கட்டு இட்டம் கொண்டான், கபாலீச்சரம் அமர்ந்தான்,
ஒட்டிட்ட பண்பின் உருத்திரபல்கணத்தார்க்கு
அட்டு இட்டல் காணாதே போதியோ? பூம்பாவாய்! 1

மைப் பயந்த ஒண்கண் மடநல்லார் மா மயிலைக்
கைப் பயந்த நீற்றான், கபாலீச்சரம் அமர்ந்தான்,
ஐப்பசி ஓணவிழாவும் அருந்தவர்கள்
துய்ப்பனவும் காணாதே போதியோ? பூம்பாவாய்! 2

வளைக்கை மடநல்லார் மா மயிலை வண் மறுகில்
துளக்கு இல் கபாலீச்சரத்தான் தொல்கார்த்திகை நாள்
தளத்து ஏந்து இளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ? பூம்பாவாய்! 3

ஊர் திரை வேலை உலாவும் உயர் மயிலைக்
கூர் தரு வேல் வல்லார் கொற்றம் கொள் சேரிதனில்,
கார் தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஆர்திரை நாள் காணாதே போதியோ? பூம்பாவாய்! 4

மைப் பூசும் ஒண்கண் மடநல்லார் மா மயிலைக்
கைப் பூசு நீற்றான், கபாலீச்சரம் அமர்ந்தான்
நெய்ப் பூசும் ஒண் புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசம் காணாதே போதியோ? பூம்பாவாய்! 5

மடல் ஆர்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடல்ஆட்டுக் கண்டான், கபாலீச்சரம் அமர்ந்தான்,
அடல் ஆன்ஏறு ஊரும் அடிகள், அடி பரவி,
நடம் ஆடல் காணாதே போதியோ? பூம்பாவாய்! 6

மலி விழா வீதி மடநல்லார் மா மயிலைக்
கலி விழாக் கண்டான், கபாலீச்சரம் அமர்ந்தான்
பலி விழாப் பாடல்செய் – பங்குனி உத்தரநாள்
ஒலி விழாக் காணாதே போதியோ? பூம்பாவாய்! 7

தண் ஆர் அரக்கன் தோள் சாய்த்து உகந்த தாளினான்,
கண் ஆர் மயிலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்,
பண் ஆர் பதினெண்கணங்கள் தம் (ம்) அட்டமிநாள்
கண் ஆரக் காணாதே போதியோ? பூம்பாவாய்! 8

நல்தாமரைமலர்மேல் நான்முகனும் நாரணனும்
முற்றாங்கு உணர்கிலா மூர்த்தி, திருவடியைக்
கற்றார்கள் ஏத்தும் கபாலீச்சரம் அமர்ந்தான்,
பொன் தாப்புக் காணாதே போதியோ? பூம்பாவாய்! 9

உரிஞ்சு ஆய வாழ்க்கை அமண், உடையைப் போர்க்கும்
இருஞ் சாக்கியர்கள், எடுத்து உரைப்ப, நாட்டில்
கருஞ் சோலை சூழ்ந்த கபாலீச்சரம் அமர்ந்தான்
பெருஞ் சாந்தி காணாதே போதியோ? பூம்பாவாய்! 10

கான் அமர் சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
தேன் அமர் பூம்பாவைப் பாட்டு ஆகச் செந்தமிழான்
ஞானசம்பந்தன் நலம் புகழ்ந்த பத்தும் வலார்,
வான சம்பந்தத்தவரோடும் வாழ்வாரே. 11

இப்பதிகத்தில் ஐப்பசிமாத ஓணவிழாவைப் பாடல்2லும், கார்த்திகைநாள் விளக்கீடு விழாவைப் பாடல்3லும், ஆதிரைநாள்விழாவைப் பாடல்4லும், தைப்பூசநெய்பூசும்விழாவைப் பாடல்5லும், மாசி கடலாட்டுவிழாவைப் பாடல்6லும், அட்டமிநாள் பவித்ரஉத்ஸத்தைப் பாடல்1லும் இவ்வாறாக பலவிழாக்களைக் குறிப்பிட்டுள்ளார்.

கேடகத்தில் விநாயகர்

வருந்திய மாதவத்தோர் வானோரேனோர் வந்தீண்டிப்
பொருந்திய "தைப்பூசமாடி" யுலகம் பொலி வெய்தத்
திருந்திய நான்மறையோர் சீராலேத்த விடைமருதில்
பொருந்திய கோயிலே கோயிலாகப் புக்கீரே

- (2ந்திருமுறை திருவிடைமருதூர்)

முத்துவிதான மணிப்பொற் கவரி முறை யாலே
பத்தர்களோடு பாவையர் சூழப் பலிப் பின்னே
வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
அத்தனாரூ ராதிரை நாளா லது வண்ணம்.

- (அப்பர் - 4ம்திருமுறை-ஆரூர்)

வீதிகள் தோறும் வெண்கொடியோடு விதானங்கள்
சோதிகள் விட்டுச் சுடர்மா மணிகள் ஒளி தோன்றச்
சாதிகளாய பவளமு முத்துத் தாமங்கள்
ஆதியாரூ ராதிரை நாளா லது வண்ணம்

ஆராய்ந் தடித் தொண்ட ராணிப்பொன் னாரூ ரகத் தடக்கிப்
பாரூர் பரிப் பத்தம் "பங்குனி யுத்திரம்" பாற் படுத்தான்
ஆரூர் நறுமலர் நாதனடித் தொண்டன் நம்பிநந்தி
நீராற் "றிருவிளக் கிட்டமை" நீணாடறியு மன்றே.

- (அப்பர் - 4ம்திருமுறை-ஆரூர்)

பவழக்கால் மண்டபத்தில் சிவனார் பார்வதி

அப்பர்சுவாமிகள் திருவிடைமருதூர் திருக்குறுந்தொகையில் 5–ந் திருமுறையில் கூறுவது

பாச மொன்றில ராய்ப் பல பத்தர்கள்
வாச நாண்மலர் கொண்டடி வைகலும்
ஈச னெம் பெரு மா னிடை மருதினில்
பூச நாம் புகு தும் புன லாடவே

மேலும் திருப்பூந்துருத்தியில் 5ம்திருமுறையில் கூறுவது,

கொடிகொள் செல்வ விழாக்குண லையறாக்
கடிகொள் பூம்பொழிற் கச்சியே கம்பனார்
பொடிகள் பூசிய பூந் துருத் திந் நகர்
அடிகள் சேவடிக் கீழ்நா மிருப்பதே

திருவொற்றியூரில் திருத்தாண்டகம் 6வதுதிருமுறைப்பாடலில்,

மத்தமா களியானை யுரிவைபோர்த்து வானகத்தார் (வரி4ல்)
ஒத்தமைந்த "உத்திரநாள்
தீர்த்தமா கவொளிதிகழு மொற்றியூ ரென்கின் றாறே"

தலையாலங்காடு, திருத்தாண்டகத்தில் 6ந்திருமுறைப்பாடலில்,

தொண்டர்க்குத் தூநெறியாய் நின்றான் தன்னைச்
சூழ்நரகில் வீழாமே காப்பான் தன்னை
அண்டத்துக் கப்பாலைக் கப்பா லானை
ஆதிரை நா ளாதரித்த வம்மான் தன்னை
முண்டத்தின் முளைத் தெழுந்த தீயா னானை
மூவுருவத் தோரு ருவாய் முதலாய் நின்ற
தண்டத்திற் றலையாலங்காடன் தன்னைச்
சாராதே சாலநாட் போக்கி னேனை

சேந்தனார்அருளிய திருப்பல்லாண்டு 9ம் திருமுறைப்பாடலில்

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகு திருவாரூரின்
மழவிடை யார்க்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடும் கூடி யெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே (சேந்தனார்)

ஆரார் வந்தார் அமரர் குழாத்தின் அணியுடை யாதிரைநாள்
நாரா யண னொடு நான்முக னங்கி இரவியு மிந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல் புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

- (சேந்தனார்)

கோயில்புராணத்தில் பவித்ரோத்ஸவம்

ஆடிபுரட்டாதிக்குட்புகழ் பதினான் கட்டமிகளொன்றிற்பூசை
தருந்தகுதி மிகுதிகுறைதவறு நீங்கத்தந்து நவந்தரு
பந்தர் சமைத்தியாகம், பரந்தவிரதாங்கமுடன் பவித்திரத்தைப் பயில்வித்து.

என்றும், இவ்வாறே தேவியின் ஆடிப்பூரஉத்ஸவத்தை கூறுகிறார்.

ஆடிப்பூர உத்ஸவம்

ஆடி மதியிற் பூரத்தி லகில முயிர்த்த பார்ப்பதி தன்
தோடு விரிதா மரைப்பதங்க டொழுது வணங்கிப் பூசிப்போர்
பீடு விரியும் விழுச்செல்வம் பெருக வாழ்ந்து கடைநாளிற்
சேடு விரியும் வளுலகிற் சென்று போகந் திளைப்பாரால்.

என்று பேரூர்புராணம் குறிப்பிட்டு உள்ளதாலும் அறியலாம்.

இவ்வாறு பன்னிருதிருமுறைகளிலும் ஆலயதிருவிழாக்கள் பற்றிய குறிப்புகளும், தெய்வங்களின் ஊர்திகள், கொடிகள், பற்றிய செய்திகளும், அதிகஅளவில் காணப்படுவதால், நால்வர் காலத்திற்கு 7ம் நூற்றாண்டுக்கு முன்னமே பலநூற்றாண்டுகாலமாக நமது கோயில்களில் திருவிழாக்கள் நடைபெற்றுவந்துள்ளதை நாம் நன்கு அறியமுடிகிறது. சங்ககாலத்தமிழ் இலக்கியங்களிலும் அக்கால விழாக்குறிப்புகள் காணப்படுதலாலும் இதை உணரலாம்.



இரத்தினகிரி விமானத்தில் சிவனார் பார்வதி



கோயில்விழாக்கள் இருபது வகைகள்

உற்சவம் என்றாலும், திருவிழா என்றாலும் ஒன்றே இது பலவகைப்படும். முக்கியமாக இவை இருவகை என்பர் ஆன்றோர். (ஒன்று நித்தியம், மற்றொன்று, நைமித்திகம் ஆகும்.)

திருக்குறள் – வான்சிறப்பு – 8ம் குறள்

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு ''

பொருள் : வானோர்க்கும் ஈண்டுச் சிறப்பொடு பூசனை செல்லாது = தேவர்கட்கும், இவ்வுலகின்கண் மக்களால் செய்யப்படும் விழாவொடு கூடிய பூசனையும் நடவாது; வானம் வறக்குமேல் = மழை பெய்யா தாயின்.

நைமித்திகத்தோடு கூடிய நித்தியமாகலின் செல்லாது என்றார். நித்தியத்தில் தாழ்வு தீரச் செய்வது நைமித்திகம் ஆதலின் அதனை முற்கூறினார். (நைமித்திகம் நிமித்தத்தாலாவது) என்பர் பரிமேலழகர்.

நித்திய உற்சவம்-தினசரி பூசை முடில் செய்யப்படுகிறது.

எல்லாச் சிவாலயங்களிலும் தினந்தோறும் நடை பெறும் பூசை நித்திய பூசை எனப்படும். அந்தந்த ஆலயங்களின் வருவாய்க்குத் தகுந்தபடி ஒரே கால பூசையும், இருகால பூசையும், நான்கு கால பூசையும், சில ஆலயங்களில் ஆறுகால பூசையும் நடைபெற்று வருவது அன்பர்களுக்குத் தெரியும். ஆயினும் நான்கு கால பூசைகளாவது நடைபெற வேண்டுமென ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது என்பர் அந்நூலை உணர்ந்தவர்கள். அவையாவன:

1. காலைசந்தி; 2. உச்சிக்காலம்; 3. சாயங் காலம்; 4. அர்த்தஜாமம், இவற்றின் காலங்கள் அந்தந்த ஆலயங்களின் நிர்வாகத்தின்படி அமைத்துக் கொள்ளப்பெறும்.

நைமித்திகம் (காரணம் பற்றி வருவது).

பஞ்சபர்வ உற்சவம் : மாச உற்சவம் என்றும் சொல்லப்பெறும்.

இதன் விபரம்: ஒரு சாரார் 1. மாதப்பிறப்பு; 2. பௌர்ணமி; 3. அமாவாசை; 4. கிருத்திகை; 5. பிரதோஷம்; என்பர். மற்றொரு சாரார் 1. பௌர்ணமி; 2. அமாவாசை; 3. கிருத்திகை; 4. வளர்பிறைத் திரயோதசியில் வரும் பிரதோஷம்; 5. தேய்பிறைத் திரயோதசியில் வரும் பிரதோஷம் என்பர். இன்னும் ஒரு சாரார் 1. அஷ்டமி; 2. கிருஷ்ணபட்ச சதுர்த்தசி; 3. அமாவாசை; 4. பௌர்ணமி; 5. மாதப்பிறப்பு என்பர்.

கடைசியாகச் சொன்ன பஞ்சபர்வ உற்சவம் தான் பலஆலயத்தில் நடைபெற்று வருகிறது.

பிரம்மோற்சவம்

இது பெரிய உற்சவம் அல்லது பெருவிழா எனப்பெறும். இது மிகச் சிறப்பாக ஒவ்வொரு சிவாலயத்திலும் ஒவ்வொரு மாதத்தில் நடந்து வருவதை அனைவரும் அறிவர். இது சில சிவாலயங்களில் சித்திரை, வைகாசி, ஆனி, கார்த்திகை மாதங்களிலும், சில ஆலயங்களில் தை, மாசி, பங்குனி மாதங்களிலும் இவ்விழா நடை பெறுகிறது. பெரும்பாலும் தேவர்களுக்குப் பகல்காலம் எனப்படும் உத்தராயணத்தில் வரும் தை மாதம் முதல் ஆனிமாதம் வரையுள்ள மாதங்களில் தான் பல ஆலயங்களில் இவ்விழா நடை பெறுகிறது.

இப்பெருவிழா சிலஆலயங்களில் 10 நாட்களிலும், வேறுசில ஆலயங்களில் 12, 13, 15, 17, 19, 21 நாட்களிலும் கொண்டாடப் பெற்று வருகிறது. சில ஆலயங்களில் பௌர்ணமி அந்தமாகவும், சில ஆலயங்களில் நக்ஷத்திர அந்தமாகவும் தீர்த்த வாரியுடன்நிறை வெய்தும்.

இப்பெருவிழா இறைவனது பஞ்சகிருத்தியத்தைக் (ஐந்தொழில்) குறிப்பதாக நிகழும். பெரும்பாலும் 10 நாட்களில் நிகழ்கின்ற இப்பெரு விழாவின் தத்துவம் இனிது விளங்கும். முதல் நாள் அன்று பெருமான் அன்னவாகனத்தில் எழுந்தருளி வருவது மரபு. இது பிரம தேவனுடையது ஆதலால் முதல் மூன்று நாள் உற்சவங்களும் சிவபெருமான் சிருஷ்டிகர்த்தா வாகிய பிரமதேவனிடம் அதிட்டித்து நின்று சிருஷ்டித் தொழிலைச் (படைத்தலை) செய்கின்றான் என்பதை விளக்கும். நான்காவது நாளில் பெருமான் நாகவாகனத்தில் எழுந்தருளி வருவது மரபு. இது திருமாலின் வாகனமாதலால் 4,5,6 ஆகிய விழாக்களும் சிவபெருமான் திதிக்கர்த்தாவாகிய திருமாலிடம் அதிட்டித்து நின்று திதித்தொழிலை (காத்தலை) நிகழ்த்துகின்றான் என்பதை விளக்கும். 7வது நாளன்று பெருமான் இரதத்திலும் 8வது நாளன்று குதிரை வாகனத்திலும் எழுந்தருளுவது மரபு. இது பெருமான் சம்மார கர்த்தாவாகிய ருத்ரமூர்த்தியிடம் அதிட்டித்து நின்று சம்மாரத் தொழிலை (அழித்தலை) நிகழ்த்துகின்றான் என்பதைக் காட்டும். ஒன்பதாம் நாளில் ஆண்டவன் பிக்ஷாடனராக எழுந்தருளி வருவது, பெருமான் தாருகாவனத்து ரிஷி பத்தினிகளது செருக்கை (அவர் அறிவை மயக்கி) அடக்கியதைக் குறிக்கும். மறைத்தல்சக்தி கருநிறமாதலால், பெருமானும் கரிய பட்டு நூல்களையும், கரிய புட்பமாலையையும் அணிந்து வருவான் இது மறைத்தல்சக்தி கருநிறமானது என்றும் மயக்கும் தன்மையுடைய தென்றும், இவ்விழா (மறைத்தலை) திரோதானம் என்னும் நான்காவது தொழிலை இறைவன் நிகழ்த்துகிறான் என்பதைக் குறிக்கும். இனி கடைசி நாளாகிய பத்தாவது நாள் அன்று, பெருமான் சப்பரத்தில்

நாக வாஹனத்தில் விநாயகர்

எழுந்தருளி வந்து தீர்த்தமாடி உயிர்களுக்கு அருள் புரிகின்றான் என்பது அநுக்ரக தொழிலைக் (அருளலை) குறிக்கும். இது சிவக்ஷேத்ராலய மஹோற்சவ உண்மை விளக்கம் என்னும் நூலில் கண்டது).

இவையன்றிச் சிவாலயங்களில் வேறுபல உற்சவங்களு முண்டு. சில சிவாகம சம்பந்தமாகவும், சில பௌராணிக சம்பந்தமாகவும் நிகழும். இவற்றுள் சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிடலாம்.

1. விநாயகர் சதுர்த்தி விழா, 2. முருகப் பெருமான் கார்த்திகை, சஷ்டி விழா; 3. தேவி ஆடிப்பூர உற்சவம்; 4. தேவி நவராத்திரி உற்சவம்; 5. அன்னாபிஷேக உற்சவம்; 6. தெப்போற்சவம்; 7. வசந்தோற்சவம்; 8. விடாய்ஆற்றி உற்சவம்; 9. மெத்தை உற்சவம்; 10. பிரதோஷ உற்சவம்; 11. பவித்திரோற்சவம் முதலியனவாம்.

விநாயகர் சதுர்த்தி விழா

இது சில ஆலயங்களில், ஒரு நாளும் விநாயகர் ஆலயங்களில் துவஜா ரோகணத்துடன் கூடிப் பத்து நாளும் நிகழும்.

முருகப்பெருமான் கார்த்திகை, சஷ்டி விழாக்கள்

பெரும்பாலும் ஒவ்வொரு நாள் மட்டும் நிகழும்; ஆண்டுதோறும் வரும் மகாஸ்கந்த சஷ்டி நாட்களில் 16 நாள் விழாவாகப் பல ஆலயங்களில் கொண்டாடப்பெறுகிறது.

தேவி ஆடிப்பூர விழா

இவ்விழா எல்லா ஆலயங்களிலும் நான்கு புஜங்களுள்ள தேவிக்கு ஆடி மாதத்தில் வரும் பூரத்திற்கு முன் 9 நாட்களிலும் சிறப்பாகச் செய்யப் பெறுவதாகும். இம்மாதம் குளிர்கால மாதலால் மக்கள் நோயின்றி வாழ வகை செய்வதாக நிகழ்த்தப் பெறுவதாகும். இந்நாட்களில் தேவியைப் பூசித்து வழிபட்டுத் தோத்திரம் செய்து உயிர்கள் இன்புறவேண்டிய தற்காக ஏற்பாடு செய்யப்பெற்ற விழாவாகும்.

தேவி நவராத்திரி விழா

நரியைக் குதிரை செய்வானும் நரகரைத் தேவு செய்வானும்
விரதம் கொண்டாட வல்லானும் விச்சின்றி நாறு செய்வானும்
முரச திர்ந்து ஆணைமுன் ஓட முன் பணிந்து அன்பர்க ளேத்த
வரவரைச் சாத்தி நின்றானும் ஆரூர் அமர்ந்த அம்மானே

திருநாவுக்கரசர் தேவாரம்



சூரவாகனம் [அசுரவாகனம்]

சூர வாகனப் பெருமை

உலகம் உய்ய உதித்த பரம்பொருள் திருமுருகன். தாரகாசுரனை சம்ஹாரம் செய்திட சிவகுமாரனாக தோன்றிய குமரக்கடவுள் தேவர் சிறை மீட்கவும் சூரனை அழித்திடவும் போர்புரிந்துவென்று மூவுலகைக் காத்தார்" என்பதை கந்தபுராணம் திருமுருகாற்றுப்படை விளக்குகின்றன. சூரசம்ஹார வரலாற்றை பறைசாற்றவே செய்யப்படும் கந்தஷஷ்டி விழாவில் சூரசம்ஹார நிகழ்ச்சியின் போதே 'சூரவாகனம்" முருகனுக்கு அமைகிறது. இத்தருணத்தில் புராணப்படி சூரன் பலஉருவங்களில் முருகனோடு போர் செய்த காரணத்தால், சூரவாகனமும், தமிழக வாகனக்கலையுள் சிறப்பிடம் பெறத்தக்கதாகும்.

சூர வாகன வடிவம்

மரத்தால் உரியபீடத்தின் மேல் சூரவாகனத்தில் கழுத்துப்பகுதிவரை சூரனின்உடலை மாவீரனுக்கே உரிய புஷ்டியான கட்டுடலாகவும், அகன்றபொலிவுற்ற மார்பும், திரண்டவலிய கைகால்களும், வலதுஇடதுகைகளில் நீண்டவாளையம் தடுப்புக்கேடயத்தையும் ஏந்தியபடி, ஆடையாக வரிந்துகட்டியகச்சையுடன், ஸகல அணிகலன்களுடன் திகழ்பவனாக, வலது பாதத்தை பீடத்தில் ஊன்றி, இடது காலை பின்புறம்நீட்டி விரலை பீடத்தில் வைத்து மண்டியிட்டநிலையில் அமைத்துக்கொண்டு கழுத்தின் மேல்மட்ட

மையத்தில் குழிஒன்றை ஆறுஅங்குல ஆழத்திற்கு இரண்டங்குல அகலத்திற்கு அமைத்துக்கொளவர். பிறகு இவ்வுடலுக்கேற்ற முகத்தை பெரியதாக உரமாகக் கிரீடத்துடன் அமைத்த பல்வேறு வடிவத் தலைகள் அக்குழியில் பொருத்தப்படுமாறு, அத்தலைகளின் கீழ்மட்டமையத்தில் இரும்புஆணியோ அன்றி கூர்முனையோ அமைத்துக்கொள்வர். இக்கூர்முனைப்பகுதியானது, உடல்கழுத்தின் மேல்மட்டத்தில் காணப்படும் குழியினுள் சரியாகப் பொருந்தி சூரனின் உடலுக்கேற்றதலையாக சேர்த்துப்பொருத்தி அமைத்திடுவர். இவ்விதமாக அசுரர்களில் பலவகையான தலையை (யானைத்தலை, சிங்கத்தலை, ஆட்டுத்தலை, எருமைத்தலை) தேவையான பொழுது பொருத்திடவும் அல்லாக்கால் நீக்கிடவுமாக அமைந்துள்ள இத் தலைமாற்றம் பெற்ற வாகனம் சூரசம்ஹார நிகழ்ச்சியில் முருகனுக்கு எதிராக அமைக்கப்பெற்ற சிங்கமுகாசுரன், யானைமுகமுள்ள கஜமுகாசுரன், அரக்கமுகாசுரன் ஆகிய வடிவத்தலைகள்மட்டும் சிங்கத்தலையாகவும் யானைத்தலையாகவும் அசுரத்தலையாகவும் பொருந்திய சூரவாகனத்தை அவ்வப்போது தலையறுக்கப்பட்ட நிகழ்வுநிலையில் தலையை மட்டும் தனியே வெளியே எடுத்து நீக்கிவிட்டு சம்ஹரித்ததாகக் காட்சிதந்தும் மற்றமுகத்தை அவ்வுடலிலேயே அப்பொழுதே மீண்டும் மாற்றம்செய்து அவனை சம்ஹரித்தும், இவ்விதமாக சூரவாஹனம் மூலமாக விழா தாரகாசுரனுடைய வதம் என்னும் வரலாற்று காண்போருக்கு வியப்பளிக்கக்கூடிய நிகழ்ச்சியாக நடைபெறுவது வழக்கம்.



சந்திரபிரபை வாகனம்



சந்திரபிரபை வாகனப் பெருமை

உலகின் கண்கண்டதெய்வமாய், அமுதஒளியை நல்கி தாவர மூலிகைகள் வளரவும், நமது கர்மங்களின் சாட்சியாகவும், விளங்கி, இரவினை ஒளிரச்செய்யும் நிலவுத்தெய்வமான சந்திரபகவானின் ஒளிமண்டலத்தை ஓர் தூவெண்மதிசூடியான தெய்வத்தின் பின்புறம் தலைக்குமேலே முழுவட்டமாக உள்ளவாறு அமைத்திடுவதே சந்திரபிரபைவாகனம். இந்தவாகனபீடம் தேவையானஉயரத்தில் அதிஷ்டானவர்க்க வேலைப்பாட்டுடன் மேடையாகவும், மையத்தில் தேவதாமூர்த்திபீடத்தை உடையதாகவும், முதலில் அமைத்துக்கொண்டு, பின்பு அதில் பதிந்து அசையாமலிருக்கும் வகையில் சந்திரவட்டத்தை (நிலாவளைவை) அமைத்திடவேண்டும். சைவ வைணவ சாக்த கோ யில்கள் யாவிலும் இச் சந்திரபிரபை, வாகனங்களுக்கிணையாக திருவுலாவில் இடம்பெருகின்றது. வட்டமான மரச்சட்டத்தின் வெளிச்சுற்று விளிம்பில் வட்டவடிவில் கண்ணாடிபதித்த ஒளிச்சின்னங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வேதாகம புராணங்கள் தெய்வங்களை

சந்திரமண்டலத்தின் நடுவே வைத்து போற்றிடுமாறு விரதபூஜைகளில் கூறுகின்றன. சந்திரனின் குளிர்ந்த முதஒளியில் மகிழ்ந்திருப்போர் தேவர்கள், சந்திரனே ஒஷதிகளின் தலைவனும் நட்சத்திர நாயகனும் இரவைச் செய்பவனுமாகிறார். எனவே நிசாகரன், கலாநாதன் எனும் சந்திர பிறையை சூடியவன் சிவபெருமாள் விஷ்ணுவும் உமாதேவியும் சந்திரமண்டலதெய்வங்களாக போற்றப்படுவர்.



சந்திரபிரபை வாகனப் வடிவம்

சுற்றுவிளிம்பு ஒரேநிறக் கண்ணாடிக் கற்களால் பதிக்கப்பட்டநிலையில் பூவேலையாக கண்ணாடிப் பதிப்பு அடுத்தவிட்டத்தினை உருவாக்குகிறது. “பாதிமதி நதிபோது மணிசடைநாதர்“ என்பார் அருணகிரிநாதர். மையத்தில் அகன்ற கண்ணாடிப் பரப்பின் நடுவே பிறைநிலா வடிவ சந்திரனின் வடிவம் வேறுநிறகண்ணாடியால் உருவாக்கப்பட்டு, அதன் நடுவே மீசையோடு கூடிய முகம் தீட்டப்படுவதும் உண்டு. வட்டத்தட்டின் கீழ்ப்புறத்தே பீடத்தோடு பொருத்தி இறைவனுக்குப் பின்னாக இப்பிரபை விளங்கும்வகையில் நீண்ட மரச்சட்டம்ஒன்று அமைக்கப்பட்டு வட்டத்தின் மையப்பகுதிவரை பின்புறம் இணைக்கப்பட்டு உறுதியாக்கப்பெறுதல்

தாங்கலை அமைத்தல் தொழில் முறையாகும். பல சிவாலயங்களில் இதுபோன்ற சந்திரபிரபைவாகனத்தைக் காணலாம். இதுவே கண்ணாடி ஒப்பனை இன்றி வெறும் வட்டச்சட்டத்தில் வண்ணப்பூச்சிற்கு மேலாக (சூரினும்) சந்திரன் வரையப்படுதலும் வழக்கில் உண்டு. இது மூன்றுவடிவவகையில்

1. முழுநிலாவாகவோ, 2. பிறைநிலாவாகவோ, 3. அரைவட்ட பாதிநிலாவாகவோ அமைக்கப்பட்டு, அதில் நடுவே, மேலே, நிலவு உலாவிய நீர்மலிவேணியனான தெய்வத்தை எழுந்ததருளச்செய்து திருவீதியுலாவைச் செய்திடுவர். நிலாவைத் தெய்வமாகப்போற்றி வழிபடுவது மிகத்தொன்மையான நமது மரபுநெறியாகும்.



அனுமந்தவாகனம் [ஆஞ்சநேயர்]

அனுமந்த வாகனப் பெருமை

வைணவக் கோயில்களுக்கே உரிய திருமாலின் சிறந்த வாகனமாக சிறியதிருவடி எனச் சிறப்பித்துப் போற்றப்படுவது அனுமந்தவாகனம் ஆகும். ராமநாமத்தை ஜபித்துவாறு இறைவனுக்கு சேவை செய்வதே தவம் என்பதை உணர்த்திடும் பக்தவாகனமாகும். இராமனுக்கே உரிய இவ்வாகனம் ஸ்ரீமன் நாராயணராகிய திருமாலுக்கும் உரியதேயாகும்.

அனுமந்த வாகனப் வடிவம்

இந்தவாகனத்திற்கு முகம்மட்டும் குரங்குமுகமாகவும், ஏனைய உடல் உறுப்புகள் அனைத்தும் வீரம்மிக்க கட்டுடலுள்ள மாமனிதனைப்போன்றும், அமைக்கப்படும். இது கலப்புஉருவ வாகனவகையுள் உள்ளதாக கருடவாகனத்தோடு ஒப்பிடத்தக்கதாய் அமைவதாகும்.

வலது முழங்காலைப் பீடத்தில் ஊன்றி, இடதுகால்பாதம் பீடத்தில்பொருந்த, வலக்கை மார்புக்கெதிரே சற்றுத்தாழ, இடதுகை

சற்றே மேலமைய விரிந்தவிரல்களும், வலதுபுறம் குழித்து இடதுபுறம் எழுச்சியுற்ற இடையினையும், கொண்டவடிவத்தில் இறைவனைத் தாங்கும் பெருமித உணர்வுள்ள முகப்பொலிவுடன் கூடியதாக தலையில் கரண்டமகுடத்தைஅணிந்தவாற தலைசற்றேதாழ்ந்து வணங்கும்பாங்கில், பச்சைவண்ணத்திருமேனியும், மார்பின்நடுவே சிவப்புநிறமும், வாய்ப்புறத்தைச் சுற்றியும், உள்ளங்கைகள் உள்ளங்கால்கள் ஆகியபகுதிகள் தாமரைப்பூபோல் சிவப்புநிறத்துடனும் கொண்டுள்ளாவறு ,நீண்டவாலுடனும், நெற்றியில் திருமண்சின்னத்துடனும் இடுப்பில் வரிந்துகட்டிய துணிக் கச்சையுடனும் ஸகலவிதமான பொன்ஆபரணத்துடனும், ஹனுமந்தவானத்தை அமைத்திடுவது விதிமுறை ஆகும்.

ஆடு வாகனம்

[மேஷவாஹனம் / அஜவாகனம்]

அக்னிதேவன் செவ்வாய்கிரஹம், முருகப்பெருமான். ஐயனார், வீரன் முதலிய தெய்வங்களுக்குரியது ஆட்டுவாகனம். இது பலவகையான ஆடுகளுக்குள் செம்மறியாடுவகை உருவில் அமைக்கத்தக்கதாகும். இடபவாகனத்தைப்போன்ற வடிவநிலை அமைப்புமுறை, மற்றும் ஒப்பனைகளை உடையது. இந்த ஆட்டுக்கிடாவாகனம்.

வலிமைமிக்கவளைந்த இரு கரியகொம்புகளும், தடித்தபின்காற் சப்பைகளும்,பருத்தவிலாப்புறம்,நெஞ்சுப்புறம்,இவையும்,ஆட்டுக்கிடாய்க்கு உரிய ஆண்மைக்குறிஇலக்கணத்தோடும், பளிங்குஉருண்டைகளால் ஒளிரும் உருண்டகண்களும், தலை, கழுத்து, கால்கள் இவற்றில் அணிகளையணிந்து கம்பீரமாகக்காட்சி தருவதாகவும், வாகனபீடத்தின் மீது முதுகின்மேல் நடுவே தேவதாபீடத்துடனும் உரியதாங்கல்களுடனும் முருகன்கோயில் விழாவிற்கென அமைக்கப்பட்டுள்ள விசேஷ வாகனமாக இது விளங்குகிறது.

புருஷாமிருகவாகனம் [வியாக்ரபாதமுனிவர்]



சைவாலயப் பெருவிழாவில் சிவபக்தருள் ஒருவரானவரும் சிவகணநிலையிலிருப்பவரும், இறைவனிடம் தனது கீழுடலை புலியின் உடலாக வேண்டிப் பெற்றவருமான முனிவரே புருஷமிருகவாகனம். ஆலயவழிபாட்டில் 16 தீபவகை உபசரிப்பின்போது புருஷமிருகதீபத்தை தேவனுக்கு காண்பிப்பர். இவர் அதிகாலையில் தினமும் காட்டில் உள்ள மரங்களிலிருந்து உரியமலர்களைக் கொய்து, அவற்றைக்கொண்டு சிவனாரை வழிபடுவதையே விரதமாகக்கொண்டு தொண்டாற்றி, சிவனடியில் இணைந்தவர்.

இவரது வாகனம் வாகனபீடத்தின் மீது விருஷபதேவரைப்போன்ற வடிவமைப்பில் கால்களும் வயிறும் வரிப்புலியின் உடலாக விளங்க, இடுப்பிலிருந்து மனிதஉடலும் மார்பகத்தில் கையில் கொய்தபூக்களை உடைய ஒலைக்குடலை தொங்கிடவும், இருகைகளையும் கூப்பி அஞ்சலிசெய்யும் வகையிலும், சாந்தமானமுகமும், தாடிமீசையும் சடைமுடிக்கொண்டையும் உடையவராக,

வெண்ணிறவிபூதி முப்பட்டைகளை நெற்றியிலும் உடலிலுமாய் திருநீறணிந்தும், ருத்ராக்ஷமாலைகளை அணிந்தவராயும், சிவமுனிவராகத் தோற்றமளிக்கும். இவரை வியாக்ரபாகர் எனக் கூறுவர். வியாக்ரம் என்றால் புலி, பாதர் புலிக்காலை உடையவர் என்று பொருள். இவர் நடராஜரின் அருகில் இருப்பவர். இவரது புருஷமிருக வாகன சேவை சைவாகமப்படி சிலதலங்களில் மட்டுமே நடைபெறுகிறது.

புருஷாமிருகவாகனர் துதி (புலிக்கால் முனி)

சீராருஞ் சதுர்மறையுந் தில்லைவா ழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியுந் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலா மீடேற
ஏராறு மணி மன்று ளெடுத்த திரு வடி போற்றி



தண்டிகை

[சிறுபல்லக்கு / தூக்குதண்டிகை] [ஆந்தோளிகா]



அரசர் மற்றும் அரசியர், செல்வந்தர்கள், ஆசான்கள், மடாதிபதிகள் முதலியோர் அமர்ந்து பயணித்திடும் சிறுபல்லக்கு தண்டிகை எனப் படுவதாகும். இதனையே ராஜஉபசரிப்பாக இறைவனுக்கு சிறப்பாக பொன், வெள்ளி, மரத்தாலமைத்து, சிறுதொலைவிற்கும், ஆலயத்துள்ளும் கருவறை பள்ளியறைகளுக்கு இடையில் தினசரி புறப்பாட்டிற்கும் பயன்படுத்துவர். இந்த தண்டிகை என்பது ஒருவர்மட்டுமே அமர்ந்திடும் ஒரு இருக்கையை உள்ளே உடையதாய், பக்கங்களும் மேற்புறமும் ஓரளவு மறைவுபட உள்ளே பட்டு பஞ்சு இவற்றாலான ஆசனங்களில் அமர்ந்து செல்வது இயல்பாகும். இதில் முன்னும் பின்னுமாக நடுவில் அமைந்த ஆட்கள் சுமந்திடும் அடிவாரை ஒன்றே இருக்கும். இதில் உள்ள அறைஅமைப்பு தாழ்ந்தநிலையில் தூளிபோல் தொங்கும் வடிவில், அறையின் நடுவிலே கீழேவைக்குமளவிலே ஒரு தண்டு இருக்கும். எனவே இது தண்டிகை எனப்படுகிறது. இது அதிக உயரமின்றி இடுப்பளவு உயரத்தில் ஒருவர் பயணிக்க ஏற்றதும் எளிதாக நால்வர் அல்லது எண்மர் சுமந்திடும் சிறுபல்லக்கு ஆகும். இதில் பக்கப்பகுதிகளுக்கு திரைச்சிலைகளையோ சிறுகதவுகளையோ அமைப்பதும் வழக்கத்தில் உண்டு. அரசியும், அதிகாரியும், தேவிகளும் இதில் மெய்க்காவலர்களுடன் உரிய நபர்களுடன் பயணிப்பது தொல்மரபு ஆகும்.



பல்லக்கு வடிவப்பெருமை

ஆலயத்தின் திருவிழாக்களில் பல்லக்குவாகனம் பலவகையில் உபயோகிக்கப்படுகிறது. இப்பல்லக்கில் இருநபர்கள் நடுவில் அமர்ந்து பயணிக்கும் வகையில் ஒரு சிறுஅறை அமைக்கப்பட்டு, இதன் முன்பின் பக்கப்பகுதிகளில் ஒப்பனைக்கு உரியதாக வளைந்தவாரை ஒன்று நடுவிலே, பெரிய, நீண்டதண்டிகை முன்னும்பின்னும் யாளிமுகப்புடன் பொருத்தப்படும். அல்லது ஒரேவடிவிலான பலமேல்வாரைகள் தண்டுகள் பொருத்தப்படும். இதன்மீது வண்ண ஓவியவேலைப்பாடுள்ள மேல் விரிப்பு எனும் விதானம் வண்ணத்துணி முத்துமணிகளால் மூடப்படும். இதில் கண்ணாடிப் பதக்கங்கள், குண்டுமணிகள், ஒளிரும்விளக்குகள், முத்துச்சரங்கள் பட்டுநூல்குஞ்சங்கள் முதலியவற்றால நன்கு அலங்கரிக்கப்பட்டிருத்தல் இதனியல்பு. இப்பல்லக்கின் கீழேஉள்ள கால்களோடு இணைந்த இரும்புவளையத்துள்ளோ அல்லது கால்களுடனோ சேர்த்து உரிய நீண்டவாரைகள் இரண்டை பல்லக்கிற்கு இடது வலதில் வெளிவிளிம்பில்கட்டி வலுவுற இணைத்திடுவர். வாகனங்களையும் பல்லக்கினையும் தூக்கிச் செல்வதற்காக அமைக்கப்பட்ட வாரை என்பது திரண்ட நீண்ட மரத்தினால், குறிப்பாக ஆலமரவிழுதினால் வலிமைமிக்கதாய் உறுதியானதாய் அமையும். தெய்வத் திருவுருவை இதன் நடுவே ஏற்றி, அசையாதவாறு அதன்பீடத்தை பொருத்தி, எதிர்புறத்தில் பெரியஅளவில் நிலைக்கண்ணாடியை வைத்து, முன்பின் அழகு தெளிவாகஅதில் தெரியுமாறு வைத்து, பிறகு ஆட்கள் பலர்கூடி ஒரே நேரத்தில் ஒரேநிலையில் உள்ளவாறு தோளில் வாரையை வைத்துப்

பிடித்தவாறு சீராக சுமந்து செல்லக்கூடிய சிறந்தவாகனம் பல்லக்கு ஆகும். பெரும்பாலும் பகலில் காலைநேர ஊர்வலத்திற்கு எல்லா தெய்வங்களுக்கும் பயன்படுத்துதல் மரபு. நடுவில் தெய்வச்சிலைக்கு முன்னும் பின்னும் பஞ்சுத்திண்டுகள், தலையணைகள், கையணைப்புகள், இரட்டை வெண்சாமரங்கள், கனிவகைகள் இவற்றை வைத்து மாமன்னர் பயணிப்பது போல் அன்போடு உலாக்களில் உபசரிப்பர். பல்லக்கு என்பது சைவ வைணவ சாக்த கோயில்கள் அனைத்திலும் முக்கியவாகனமாகும். இரவில் முத்துப்பல்லக்கு, கண்ணாடிப் பல்லக்கு, புஷ்பபல்லக்கு இவைகளைப் பயன்படுத்துவது மரபு. கீழே இருபுறத்திலும் இரண்டுவாரைகளை பலர் சுமப்பதால் இது எடுப்புப் பல்லக்கு என்றும், மேலே துணிவிரிப்பால் மூடுவதால் மூடுபல்லக்கு என்றும் பெயர்பெறும். பலவண்ணமணிகள் கண்ணாடித்துண்டு பதித்தது மணிப்பல்லக்கு என்பதாகும். இது ஆந்தோளிகா என்றும் சிபிகா எனவும் பெயர்பெறும் வாகனமாம்.



பல்லக்கு வாகனம்

திருவிழாவில் தெய்வங்கள் பல்லக்கில் ஏறி பயனித்து தீர்த்தக்கரை சென்று தீர்த்தம்அளித்தல், வீதிவலம் வருதல் வழக்கம். அஞ்ஞானத்தைப் போக்கி ஞானஒளியை ஏற்படுத்தும் பரமகுரு வானவர் பல்லக்குபவனி வருதல் சேவார்த்திகளுக்கு தனது கருணாகடாக்ஷ அமுத அருட்பார்வையால் சாமபவீதீட்சையை அளித்து, அருள்புரிந்து பிறவிப் பயன் தருவதே பல்லக்குபவனிவருதலாம். இதையே தங்கப்பல்லக்கு, வெள்ளிப்பல்லக்கு, புஷ்பப்பல்லக்கு உலாக்களும் உணர்துவதாகும்..

பல்லக்கு உலாவில் பரமன்துதி

எந்தை யீசன் எம்பெருமான் ஏறமர் கடவுள் என்றேத்தி
சிந்தை செய்பவர்க்கு அல்லால் சென்றுகை கூடுவதன்றால்
கந்த மா மலர் உந்திக் கடும் புனல் நிவா மல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயில் அரத்துறை அடிகள்தம் அருளே

(ஞானசம்பந்தர் தேவாரம்)

வானவன்காண் வானவர்க்கு மேலானான்காண்
வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்காண் ஆனைந்தும் ஆடினான்காண்
ஐயன்காண் கையில் அனல் ஏந்தியாடும்
காணவன்கான் கானவனுக்கு அருள்செய்தான்காண்
கருதுவார் இதயத்துக் கமலத்து ஊறும்
தேனவன்காண் சென்றடையாச் செல்வன்தான்காண்
சிவனவன்காண் சிவபுரத்து எம்செல்வன்தானே

(திருநாவுக்கரசர்திருத்தாண்டகம்)



புஷ்பசிவிகை (பூப்பல்லக்கு உலா)

ஆலயப்பெருவிழாவில் திருக்கல்யாணத் திருவிழாவில் இறைவன் தேவியுடன் பூப்பல்லக்கில் திருவீதிவலம் வருவது வழக்கம். இறைவனும் இறைவியும் புரிந்துகொள்ளும் திருமணமே திருக்கல்யாணம் எனப்படுவதாகும். மூவுலகின் ஆதிதம்பதியான தேவனும் தேவியும் புருஷனும் பெண்ணுமாகி மக்கள் சுகபோகம் மூழ்கவும், நமது வம்சம் தழைக்கவும் தாம் திருமணம்புரிந்து கொண்டு, இல்லற அறநெறிகாட்டி ஆற்றுப்படுத்தலைக் குறிப்பதாகும். இறைவன் போகியாயிருந்து உயிர்களுக்கு போகத்தைப் புரிகின்றான். இறைவனுக்கு பொகாவஸ்தையும் உண்டு என்பதை இவ்விழா உணர்த்துகிறது. இறைவன்போகவடிவில் வாழாமற்போனால் உலகத்துஉயிர்கள் அனைத்தும் போகியாய் வாழ்ந்திட இயலாது. ஆதலின் இறைவன் திருக்கல்யாணம் புரிந்து வானோரும் மலர்தூவித் தொழுதிட மலர் சிவிகையில் (மலர்மஞ்சத்தில்) எழுந்தருளி உலரவந்து அருள்கிறார் தினமும் ஆலயவழிபாட்டில் இறைவனை லயம்போகம் அதிகாரம் என்னும் மூன்றுநிலைகளிலும் வழிபட பல்லக்கு பயன்படுகிறது.

ஆனந்தராயர் பூப்பல்லக்குத்துதி

நித்தம் மனாளர் நிரம்ப அழகியர்
சித்தத்து இருப்பரால் அன்னே என்னும்.
சித்தத்து இருப்பரால் தென்னன் பெருந்துறை
அத்தர் ஆனந்தரால் அன்னே என்னும். (மாணிக்கவாசகர்)



சப்பரம் [கட்டுசப்பரவாகனம்]

[பர்ணசாலா/சாலாகாரம்]



பட்டரைவண்டி எனப்படும் சமசதுரமான அல்லது செவ்வகவடிவமான தளத்துடன்கூடியதும், நடுவில் இரு தாங்குசக்கரங்கள் நான்குமூலைகளில் நான்கு கர்ணசக்கரங்களுடனாக ஆறு வலிமையான சக்கரங்களோடு உள்ளதுமான பட்டரை வண்டியின் மேல் நாற்புறமும் தேவையாக உயரத்தில் பலகால்களை நிலைநிறுத்தி முன்புறம் தோரணவாயில் போன்று முகப்புப்பட்டையை அமைத்து, முப்புறமும் மூடி பக்கங்களையும் அடைத்து, மேலே முகப்பிலோ சுற்றிலுமோ கோயிலின் கோபுரவடிவத்தில் மூன்று அல்லது ஐந்துநிலைகளில் பலஅடுக்குகளாக உயரமாகக்கட்டி இதன் உச்சியில் மூன்று அல்லது ஐந்துஸ்தூபி கலசங்களையும் பொருத்தி அமைத்திடுவர். இதன் அங்கங்கள் முழுவதையும் பலவண்ணங்களில் இலைகள் மலர்களாலும் மஞ்சள்நிற குருத்தோலைகளாலும் முகப்புப்பட்டை முதலானபகுதிகளை அலங்கரித்து, நடுவில் வாகனபீடத்திலோ, வாகனத்துடனேயோ தெய்வத்திருவுருவை எழுந்தருளச்செய்து, வண்டியில் கயிறுகட்டி மக்களால் இழுத்தவாறோ அல்லது காளைமாடுகளைப்பூட்டி செலுத்துமாறோ வீதிஉலாவைச் செய்வது சப்பரத்திருவீதிஉலா முறையாகும். தென்னைமரத்தின் இளங்குருத்தினின்றும் தளிர்கின்ற தளிர்ஓலைகளைப் பிரித்து, அழகாகக் கத்தரித்து பொருத்திடும்

பழுத்தவெண்ணிறம்கொண்ட ஓலையே குருத்தோலை ஒப்பனைமுறை. இந்தவகைவாகனம் சோழவளநாட்டில் மிகவும் புகழ்பெற்றவாகனமாகும். சிலதலங்களில் பவழக்கால் சப்பரம் என்று 2ம் நாள்காலையில் வீதி உலாவரும் வழக்கம் உள்ளது. இது அசையும் கோயிலாக விளங்கும்.

சப்பரஉலா தத்துவம்

திருவிழாவில் பலசக்கரங்களுள்ள பட்டரைவண்டிமீது கால்களைநாட்டி கட்டியகோயில் போன்ற வடிவமே சப்பரவாகனமாகும். இதன்நடுவே தேவன் தேவியோடு வாகனத்திலோ மஞ்சத்திலோ எழுந்தருள்வார். இது கலைநயம்மிக்க கைவேலைகளால் மலர் குருத்தோலையால் அலங்கரித்த கட்டு, முகப்பு உடையதாகும். இதில் பலவகை இசைக் கருவிகளின் இன்னிசையிலும் ஆடல்பாடல்களாலும் இறைவனை ஆனந்த நிலையில் காண்பதே சப்பரத்திருவிழா உணர்த்துவதாகும்.

சப்பரத்துறை - மதுரைசோமசுந்தரேசர் துதி

சடைமறைத்துக் கதிர் மகுடந் தரித்து
நறுங் கொன்றை யந்தார் தனத்து வேப்பந்
தொடைமுடித்து விடநாகக் கலனகற்றி மாணிக்கச் சுடர்பூணேந்தி
விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதி மருமகனாகி மீன நோக்கின்.
மடவரலை மணந்துலகம் முழுதாண்ட
சுந்தரனை வணக்கஞ் செய்வாம்.

(பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணம்)



ஓலைச்சப்பரக்காட்சி

விமானம் [சவுடல் விமானம்]

விமானம் என்ற சொல்லுக்கு சிறப்புஅளவுமுறை கொண்டு அமைக்கப்படும் மூலஆலயம் என்பது பொருள். இது ஆறு உறுப்புகளைக் கொண்டதாக அமைக்கப்படும். அவை 1) அதிஷ்டானம் அதாவது கீழ்தளம் மேடை 2) பாதம் அதாவது தூண்கள் (சுவற்றுடன்) 3) பிரஸ்தரம் இது மேல்தளக்கூரை உத்தரம் 4) கண்டம் இது குருகிய கழுத்துப்பகுதி 5) சிகரம் இரு பருத்த தலைப்பகுதி. 6) ஸ்தூபி இது கலசம் மகுடம் ஆகும். இது வடிவத்தில் நிலைப்புவிமானம் எனும் இடம் பெயராதது. இதே வடிவத்தில் எடுப்புவிமானமாக வாகனபீடத்துடன் அமைக்கப்படுவது வாகனவிமானம். இது கோபுர அல்லது விமான வடிவில் அடிப்புறம் அகன்று, சுற்றிலும் சுவர்மறைப்பு இல்லாமல் 12 தூண்களை (12கால்களை) உடையதாய் உத்தரத்தின்மேல் ஒரு அடுக்கிலோ அல்லது பலஅடுக்குகளுடனோ கண்டசிகரவர்கமுடையதாக உயரே எழும்பி எழுந்து, மேலே குறுகி, உச்சியில் ஒரு கலசம் அல்லது மூன்று கலசங்கள் அல்லது ஐந்து கலசங்கள் உள்ளதாக உருவ அமைப்பு உடையதாக வாரை இரண்டின்மீது கட்டி, தோளில்சுமந்தும்

அல்லது பட்டரைவண்டியில் வைத்தும் ஒப்பனையுடன் உலாவருவது. இந்த விமானம் விருஷபதளமூலைவாகனங்கள். கோடிபூதங்கள், நாலுதிசையிலும் நான்கு தெய்வங்கள் இவற்றுடன் உள்ளதாக எடுத்துச் செல்லத்தக் கோயில்வடிவ முடையதாகும். எல்லா தெய்வங்களுக்கும் விமானம் சிறப்பாக பகல்நேரவீதிஉலாவிற்கு கைகொள்ளப்படுவது வழக்கமாகும்.

விமானத்துறை மகேசர் துதி

தேவார்ந்த தேவனைத் தேவரெல்லாந்

திருவடிமே லலரிட்டுத் தேடி நின்று

நாவார்ந்த மறைபாடி நாட்டமாடி

நான்முகனு மிந்திரனு மாலும் போற்றக"

காவாரந்த பொழிற்சொலைக் கானப் பேராய்

கழுக் குன்றத் துச்சியாய் கடவு ளேநின்

பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்

பூம் புகலூர் மேவிய புண்ணி யனே (திருநாவுக்கரசர்)

இந்திரவிமானஉலா

திருவிழாவில் அண்டர் நாளகனான இறைவன் மூவுலத்தோருக்கும் தன்ஆளும்காருண்யத்தை நினைவூட்டவும், எண்திசைக்காவலர்களையும் மக்களைக்காத்திட ஆணையிடும் வண்ணமாகவும் தேவேந்திரனின் நவரத்தின விமானத்தில் ஆரோஹணித்து வீதிஉலாவருவார். இது சிவனாரின் திரைலோக்கிய விஜய்யாத்திரை என்று போற்றப்டும். பாரொடுவிண்ணும் மண்ணும் பதினெட்டு கணங்கள் ஏத்தப்பரமன் பவனி வருவது போகத்தில் உயிர்களை பல்லாண்டுவாழ்ந்திடச் செய்யவேயாகும் தேவன் விமானத்தில் காட்சிதந்ததை புராணங்கள் கூறுகின்றன.

விமானசேவா துதி

மொய்த்தபுனக்காடுஎறிந்து நிலம்திருத்தி
வரும் அளவில் முளைத்தஞான
வித்துஅனைய சிவக்கொழுந்தின்
திருமுடியில் பரிதிகரம்மெல்லத்தீண்டச்
சித்தம்நெகிழ்ந்து இந்திரன்தன்வெண்கவிதைதிங்கள் நிழல்செய்வான்
உள்ளம் வைத்தன்ன் அப்போது இரவிமண்டலம்போல்
இழிந்த்து ஒரு மணிவிமானம்

(பரஞ்சோதியார். மதுரை திருவிளையாடற்புராணம்)



மஞ்சம் (பர்யங்கம் / கட்வா)

எடுப்புத்தொட்டி



ஆலய திருவிழாக்களில் வீதிஉலாவிற்கான பகல்நேர வாகனவகையில் மஞ்சம் என்பது அதிகமாகப் பயன்படுவதாகும். இதில் அனைத்து தெய்வங்களையும் எழுந்தருளச்செய்து, வாகனபீடத்தின் நான்கு கால்களுடன் இருபக்கமும் இணைத்துக்கட்டிய நீண்டவாரைகளை பக்தர்கள் தூக்கித் தம்தோள்மீதுவைத்து சுமந்தவாறு செல்வர். ஓரிடத்தில் நிற்கும் தருணங்களில் தோளிலிருந்து தற்காலிகமாக இறக்கி இருத்திவைக்கத் தக்கதான நான்கு வலுவான ஆயகால்களுடன் புறப்பாட்டைச்செய்திடுவர். ஆயகால் எனப்படுவது, மாா்பளவிற்கு உயரமுள்ளதாய், வலுவானதும் கனமானதுமான வேலைப்பாட்டுடன் கூடியதானதூண்கள் இதன்கீழே நான்குதிசையிலும் ஒரு முழஅளவிற்கு நீண்டகனசட்டங்களை அடியில் சமமாக உடையதும், உச்சியில் வாரையின் வட்டம்பாதி பொருந்தும்படியான அளவிற்கு அரைவட்டவடிவில் மரத்தாலான திம்மக்கட்டை அல்லது இரும்புப்பட்டை உடையதான கையில் உடன் எடுத்துச் செல்லும் சிறுதூண்களாகும்.

மஞ்சம் என்பது கட்டில் போலும் தொட்டி போலும் வடிவமைப்பு உடையதாய் சற்றே உயரமான கனமான நான்குகால்களை உடையதும், கால்களின் மேலே செவ்வகவடிவில் கனமான மரப்பலகைகளைப் பரப்பி பீடம்அமைத்து, அதன்நடுவே தேவபீடத்தைக் கட்டிடஉதவும் இரும்பாலான கொக்கிகள் அல்லது சட்டங்கள்கொண்டுள்ளதும், சுற்றிலும் கைசாண்உயரத்திற்கு தடுப்புப்பலகையை` நாற்புறமும் கொண்டதாய், பின்புறத்தில் மரத்தாலான திருவாசியையும் குடையையும் பொருத்தும்படியாக விளங்கும் வாகன இருக்கையாகும். பெருமாளுக்கும் பெண்தெய்வங்களுக்கும் இது அதிகம் கையாளப்படுவதாகும்.



சிம்மாசனம் [அரசு அரியணை]



தெய்வத் திருவீதிஉலாவில் வாகனபீடத்தின் நடுவே அரசாளும் சக்ரவர்த்திகள் அமரும் அரியனையை மரத்திலோ உலோகத்திலோ வடிவமைத்து, அதன்மீது தெய்வத்திருமேனியை எழுந்தருளச் செய்து, பின்புறம் பிரபை எனும் திருவாசியை அமைத்து, நடுவில் உயர்ந்த ஒருகுடையை பொருத்தும் அடித்தாங்கலையும் கொண்டுள்ளதான சிம்மாஸன பீடமாகும். இது சிவன் பெருமாள் முதலானோர்க்கு நூலில் இலக்கணத்துடன் கூறப்பட்டுள்ளது.

சிம்மாஸனம் என்பது அதன் நான்குமூலைகளிலும் சிங்கவடிவக் கால்களை உடையதும், மேலே உபபீடவர்க்கவேலையுடன் கனமான மரப்பலகைகளால் தளத்தை அமைத்து, நாற்காலியாக வடிவமைத்து அதில் பின்னால் உயர்ந்ததாக வேலைப்பாடுள்ள சித்திரபலகையை வைத்து இருபக்கங்களிலும் படுத்துள்ள சிங்கப்பிரதிமைகளைக் கைத்தாங்கலாக அமைத்து, இதன் நடுவில் தெய்வத்தை அமர்த்தும் இடத்தில் கொக்கிளையும் அமைத்து ஒருகுடையை பின்புறம் நடுவே சொருகி, நிலைத்திடருக்குமாறு அமைத்திடுவர். இந்த இருக்கை பலவண்ண ஒப்புணையுடன் அமைக்கப்படுவது. வண்ணக்கற்கள் கண்ணாடிகள் பொற்தகடுகள் பொருத்தப்பட்ட அரியணையாக பேரழகுடன்

சிங்காசனத்தை அமைத்து அதில் தெய்வத்தை அரசனைப்போல் அமர்த்திடுவது மரபு. பெருவிழாவில் பகல்நேர ஊர்வலத்திற்கு இந்த சிம்மாசனம் கையாளப்படுவது வழக்கம்.



திவ்யசிம்மாசனம் / தவிசு (கைபாரஅரியணை)

ஆலயதிருவிழாக்களில் அரசு அரியணியில் வெள்ளியில் சிங்க இருக்கையில் இறைவனை எழுச்தருளச்செய்து கைத்தாங்கலாக் உலாவரச்செய்வர். இது ஒருவகை ராஜஉபசரிப்பாகும். பிரம்மாண்டநாயகனாய் தேவதைகளின் சக்ரவர்த்தியாயுள்ள இறைவன் அரியணையில் இருந்தருள்வது உயிர்களுக்கு சுகபோக வாழ்வளிப்பதற்கேயாகும்.

மகாதேர்துதி

அங்கம் ஆறுமே கால்களாய் முதல் எழுத்து அம்பொன் பீடிகையாகித்
துங்க நான்மறை நூல்களே நித்திலம் தொடுத்து அசை தாம்பு ஆகி
எங்கள் நாயகன் எம்பெருமாட்டியோடு இருப்பதற்கு உருக்கொண்டு
தங்கினால் என நவமணி குயின்றபொன் தவிசுஅது சமைத்திட்டார்.

அண்ணாமலைஅண்ணலார்துதி

பூவார் மலர் கொண்டு அடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று மூவர்க்கு அருள் செய்தார்
தூமா மழை நின்று அதிர வெருவித் தொறுவின் நிரை யோடும்.
ஆமாம் பிணை வந்து அணையும் சாரல் அண்ணா மலையாரே

(திருஞானசம்பந்தர்தேவாரம்)

சிம்மாஸன தேவதேவர் துதி

வேந்தாகி விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும்
நெறிகாட்டும் விகிர்தனாகி
பூங்காம நருங்கொன்றை சடைக்கணிந்த
புண்ணியனார் நண்ணும்கோயில்
காந்தாரம் இசையமைத்து காரிகையார்
பண்பாட கவினார் வீதி
தேந்தாம் என்று அரங்கு ஏறி சேயிழையார்
நடம் ஆடும் திருவையாறே

(திருஞானசம்பந்தர் தேவாரம்)

தங்கரதம் [ஸ்யந்தனம்] [சிறுதேர்]



நான்கு சக்கரங்களின்மேலே சமசதுரமான வடிவிலோ, எட்டுபட்டை வடிவிலோ கனமான மரப்பலகைகளை சமமாக மேல்தளமாக முறையே அமைக்கப்பட்டபட்டரைகளின் மீது, நிலைப்பான பல கால்களையும், அக்கால்களின் மேல் குறுக்குச் சட்டங்களைப் பொருத்திப் பரப்பி தளம்அமைத்து சிலஅடுக்குகளாக எழுந்து உயர்ந்து உச்சியில் சிறுத்து ஒருகலசத்துடன் நிற்கும் கூரைப்பகுதியுடன் கூடிய ஊர்தி ரதம் எனப்படுவது ஆகும். இதன் முன்புறத்தில் நுகத்தடியைப் பொருத்தி அமைத்து அதில் குதிரையை பூட்டி, தேரோட்டிமூலமாகச்

செலுத்துவர். தெய்வங்கள் ஊர்ந்துவரும் பெருவடிவ இவ்வூர்திகள் பலவாறு வடிவமைக்கப்படுவதுண்டு. பண்டையகாலத்தில் பயணத்திற்கு இதையே சிறியஅளவில் அமைத்து, அதன் முன்புறத்தே குதிரையை பூட்டி மனிதர்களும் விரைவுவாகனமாகச் செலுத்திப் பயன்கண்டுள்ளனர். இது கோயிலுக்கு உள்ளேயும் வெளியேயும் செலுத்தத்தக்க வகையில் சிறியஅளவில் உலோகத்தகடு போர்த்தி, தங்கரதம் வெள்ளிரதம் என்று பக்தர்கள் கைகளால் தள்ளியும், இழுத்தும், இறைவனை பவனிவரச்செய்வதுண்டு. இந்த ரதம் அனைத்து தெய்வங்களுக்கும் ஏற்றது. இதனை சிறிய அளவில் பெருந்தேரின் உருவத்திலோ அல்லது பூமி பாரதளத்தின் மீது மலர்ந்து உயர்ந்த பத்மஉருவத்துடனோ அமைத்து அடிக்கடி ஒருநாள் விழாவிற்கு ஏற்பது மரபு.

தேர் (மஹாரதம் / பெருந்தேர்)



மஹாரதம் எனப்படுகிற பெருந்தேர் என்பது வலிமைமிக்க மரமான தேக்கு, கருங்காலி, இலுப்பை, முதலிய மரங்களைக் கொண்டு, எட்டுபட்டை அல்லது சதுர வட்டச் சுற்று ஆகியவடிவில் அடிப்புறம் சிறுத்து, (சமசதுரமாக ஆதாரபீடம் இருக்குமாறு சக்கரங்களில் மேலே, விளங்கிட கீழிருந்து மேலாக சிறிதுசிறிதாகப் படிப்படியாக பருத்து, மரச்சட்டக் கோப்பு சிற்பவேலைப்பாடுகள் நிரம்பிய வெளிப்பரப்பினையும், கீழே வலிமைமிக்கதான நான்கு அல்லது (நடுவில் இரண்டுடன்) ஆறு உருளைச் சக்கரங்களையும் கொண்டது. மூன்று அல்லது ஐந்து அடுக்கு மரத்தட்டுச் சட்டங்கள் நாடிக்கோப்புமுறையில் வலிவுறப் பொருத்தப்பட்டிருக்கும்.

இதன் மேல்தளத்தின் மீது அதிக எண்ணிக்கையில் காடிக்கால் கோப்புமுறையில் சுற்றுப்பகுதியுடன் மண்டபவிதிமுறைப்படி மரக்கால்களை வலுவாக நிறுத்தி, விமானவடிவில் சட்டங்களை அமைத்து அதன் மேலே

சித்திரவேலைப்பாடமைந்த வண்ணவண்ணச் சீலைகள் போர்த்தப்பட்டு உச்சியில் ஒரு கலசத்துடன் ஒரு குடையுடன் விளங்குவது ரதம் ஆகும். இதில் யாளிக்கால்கள் நால்புறமும் கட்டப்பட்டு, துணித்தொம்பைகள் தொங்கிவிடப்பட்டு, வேதவடிவமான நான்கு தாவும்குதிரைகளையும், சாரதியாக பிரம்மன் முதலான தேரையும் சிற்பங்களாகப் பொருத்திட, தேரடியில் தேவரைச்சுற்றி அமைந்த வளையத்துள்ளே நுழைத்துப் பிணித்து கனரகமான வடக்கயிற்றினால் தேரைச் சுற்றிப்பிணித்து இருபுறமாகத் தேரின் முன்னே திரளானமக்கள் நின்று இழுத்து தேரை நகர்த்திச் செல்வர். ஆங்காங்கே தேரை நிறத்துதற்கு முட்டுக்கட்டைகளையும், தேரைக் கிளப்புவதற்கு சரக்கட்டைகளையும் பயன்படுத்துவது உண்டு. பெருந்தேர் பலவகையில் பலவடிவில் கலைநயத்துடன் ஒப்பனை செய்யப்படுவதும், அந்தந்த ஊர்மரபுப்படி ரதயாத்திரை பின்பற்றப்படுவதும் நடைமுறை. தேர்மீது தெய்வங்களை இணைப்புப்பலகை போடப்பட்ட தேரேற்று மண்டப தளத்திலிருந்து ஏற்றியும், அவ்வாறே தேரிலிருந்து ரதாரோஹண மண்டபத்தில் சமஉயரதளத்தில் இறக்கி, படிக்கட்டு மூலம் தரைஇறக்கி ஆலயத்தை அடைவிப்பதும் தேர்த்திருவிழா மரபு ஆகும்.



திருத்தேர்பவனி (ரதோத்ஸவம்)

ஆலயதிருவிழாவில் இறைவன்தேர்மீது எழுந்தருளி வீதிவலம் வருவது மிகச்சிறந்த வழிபாட்டிற்கு உரியதாகும். இறைவன்தேரில் வருவது துஷ்டர்களை மாய்த்து, சிஷ்டர்களைக் காக்கும் ஸம்ஹார, அனுக்ரஹ செயல்களை உணர்த்தும் திருக்காட்சியாகும். தேரின் வடிவமைப்பு அண்டத்திற்கும் பிண்டத்திற்கும் சமானமாகும். விசுவவிரா ட்சொரூபமே தேரின் எட்டு அடுக்குகளாகும். அவை மேலிருந்து முறையே கலசம் சிவசக்தி, கும்பம் (சிகரம்) ஷோடசாந்த ஸ்தானம் அடுத்தகீழ் அடுக்கு துவாதசாத்தம், அடுத்து மஸ்தகஅதிஷ்டானம் அடுத்து புருவமத்தியஸ்தானம், நடுவில் தாங்கிடும் குத்துக்கால்கள் தத்துவமாகும் தூண்கள். முன் மூன்றுதுறைகள் மூன்றுகண்கள், பின்னவை சிகையும், இடவலக்காதுகள் என்பவையாம், இறைவன் அமர்ந்துள்ள கேடயபீடம் முப்பாழ்மண்டலங்கள், சூரியசந்திரகலைகள், சாரதி அக்னிக்கலை இவை நாசியாகும் அடுத்தஅடுக்கு கண்டஸ்தானம், அதைஅடுத்த அடுக்கு இருதயஸ்தானம் அதைஅடுத்த அடுக்கு நாபி, அதற்கு அடுத்தஅடுக்கு குண்டலிஸ்தானம். பத்துசக்கரங்களும் பத்துவகை வாயுக்கள். இவைக்கு கர்த்தா இறைவன். இவ்வாறு அமைந்தபிண்டத்வ சரீரமாகிய தேரில் தசவாயுக்களாகிய சக்கரங்களை நிறுத்தி, அசைவற்றமனதை உந்தி, குண்டலியிலிருந்து நாபிக்கும், அகிலிருந்து கழுத்திற்கும், அதிலிருந்து வாய்க்கும், ஏற்றி இலயப்படுத்தி முறையே இரதக் குதிரையாம் நாசிக்கும், அங்கிருந்து கண்வழியாகுவும், நடுவழியாக மேல்நோக்கிஆறாம் அடுக்காகிய புருவநடுவிற்கு (ஆக்ஞைசக்ரம்) ஏற்றி லயப்பட்டு, சும்மா இருந்தபடி இருக்கும் நித்தியசுகியாய் இருந்திடல் வேண்டும் என்ற இத்தகைய இலயக்கிரமத்தைக் காட்டுவதே திருத்தேர்விழாவாம். மேலும் மும்மலமான முப்புராசுரர்களை சிரித்தெரித்து சிவன் ஆன்மகோடிகளைக் காப்பாற்றிய பாதுகாப்புத்தொழிலை உணர்த்துவதே தேரோட்டமாம். ஆன்மலயத்தால் சிவபோகம் எய்த விழைவதே தேரோட்டவிழாவாகும். ,தனை ஞானசம்பந்தர் மூவார்புறங்கள் எரித்த அன்று மூவர்க்கருள்செய்தார் என்றும், தொடுத்தார் புரம் மூன்று எரிய சிலைமேல் ஏரிஒன்பகழியார். என்றும், நாவுக்கரசர் திரிபுரங்கள் துடியெழத்தின் சிலைகைக்கொண்ட போரான்'' என்றும், அருணகிரிநாதர் ''முப்பரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்'' என்றும் கூறுவர். ரதோத்ஸவம் சிவத்தன்மைஎனும் எட்டுகுணங்கள் ஆன்மாவிற்கு விளங்குதற்பொருட்டு நடத்தப்படுவதாம். அவை, 1.சர்வக்ஞத்வம், 2.நித்யதிருப்தி, 3.அநாதிபோதம், 4.சுதந்திரத்வம், 5.அலுப்தசக்தி, 6.அனந்தசக்தி, 7.நிராமயான்மா, 8.விசுத்ததேகம் என்பன இறையருளால் விளைவிக்கப்படும் அருட்பேறு குணங்களாகும். இதனை தேர் உணர்த்துகிறது.

தேரேறிய சங்கரர் துதி

போ ழொத்த வெண்மதியம் சூடிப் பொலிந் திலங்க
வேழத்து உரிபோர்த்தான் வெள்வளையாள் தான்வெருவ
ஊழித்தீ அன்னானை ஓங்கொலி மாப் பூண்டதோர்
ஆழித்தேர் வித்தகனை நான் கண்டது ஆரூரே

(திருநாவுக்கரசர் தேவாரம்)

ஆரார் வந்தார் அமரர் குழாத்தின் அணியுடை ஆதிரைநாள்
நாராயண னொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேர்ஆர் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே

(சேந்தனார்திருப்பல்லாண்டு)

மன்னிய கலாதி யேழு மாணவ மலமு மாயத்
தன்னியல் வேட்டை யாடுந் தன்மையுட் கொண்டு நாதன்
சின்மயக் குடிலை வில்லுஞ் சிற்பரை யம்புஞ் சேர்த்திப்
பன்னெடுங் கருவி தோற்றப் பகையற வுலாவ லுற்றார்.

எனும் சமயநெறி உற்சவ்விளக்கப்பாடலாலும் அறியலாம்.

வாகனமும் ஏற்கும் தெய்வங்களும்

வாகனங்கள்	ஏற்கும்தெய்வங்கள்
1 எருது, காளைமாடு	மகேசர், ருத்திரர், விநாயகர், முருகர், சாஸ்தா, உமாதேவீ, சண்டேசர்
2. குதிரை / ஆண்பரி	அனைத்து தெய்வங்களுக்குமானது, புதகிரகம், சுக்கிரன், ஐயனார்
3. யானை / கஜம்	சிவன், திருமால், இந்திரன், முருகன், பிருஹஸ்பதி, சாஸ்தா
4. சிங்கம் / சிம்மம்	தேவீ, துர்கை,லக்ஷ்மீ, காளீ, சிவன், திருமால், முருகன், விநாயகர், புதன்
5. புலி/வியாக்ரம்/ வேங்கை	ருத்திரன், வீரபத்திரர், சாஸ்தா, துர்கை, வீரனார்
6. செம்மரிஆட்டுக்கடா	அக்னிதேவன், கந்தசாமி, ராகுகிரகம், அங்காரககிரகம்
7. காட்டெருமை	யமதருமன், துர்கை, காளீ, வாராகீ
8. யாளி வாகனம் (சிங்கம்போன்ற வனவிலங்கு)	திருமால் வாகனம், காளீ, பிடாரீ, மாரியம்மன்
9. மான் / கலைமான்	வாயுதேவன், சந்திரகிரகம், உமாதேவீ
10. பெருச்சாளி / மூஞ்சூறு	விநாயகர்
11 மயில் / மயூரம்	முருகர், ஆறுமுகக்கடவுள்
12. கிளி/சுகம்/கீரம்	தேவியர், மன்மதன், ரதிதேவீ, கன்னியர்
13. காக்கை அண்டங்காக்கை	சனைச்சரகிரஹம், பித்ருக்கள்
14. கழுகு / மயானப்பெருங்கழுகு	சனைச்சரகிரஹமூர்த்தி.
15. கருடன் பருந்து பறவை	சுக்கிரகிரகம், விஷ்ணு
16. மகரம் (கடற்குதிரை) முதலை	வருணதேவன், கங்கைதேவீ.
17. சேஷவாகனம் (நாகராஜா)	சேஸாசனர், அனந்தர் விஷ்ணு.
18. நாகவாகனம் வாசுகிபாம்பு	சிவன் மஹாதேவர், வீரபத்திரர், சாஸ்தா
19. கற்பகவிருக்ஷம் தேவமரம்	ஸகலதெய்வங்களுக்கும், ஏற்றது
20. ஆலமரம்/கல்லாலமரம்	சிவபெருமான், தக்ஷிணாமூர்த்தி
21. குருந்தமரம்	கிருஷ்ணர், ராதாகிருஷ்ணலீலாதரு,
22. புன்னைமரம் / பில்வமரம்/ வன்னிமரம்/ அத்திமரம் / மாமரம்	உரிய தெய்வம் நட்சத்திர தேவதை தலவிருக்ஷத்தடி சேவைகாட்சிக்கு.

23. காமதேனு தெய்வப்பசு	உமாதேவீ, லக்ஷ்மி, வாணீ.
24. அன்னம்/ ஹம்ஸபக்ஷி அன்னப்பறவை	திருமால், பிரம்மா, சரஸ்வதீ, கௌரீ, லக்ஷ்மீ, அங்காரகன் பிருகஸ்பதி,
25. பூதவாகனம் (கும்போதரன்)	சிவன், சால்தா, வீரபத்திரர்வீரனார்.
26. பூதகிவாகனம் (வேதாளம்)	காளீ, துர்கை, பிடாரியம்மன், மாரீ.
27. நந்திவாகனம்	சிவனார், கந்தன்
28. புருஷமிருகம்	சிவனார், கலப்பினவாகனவகை
29. அனுமந்தவாகனம் கலப்பினவாகனம்	விஷ்ணு, ராமர், ஹரிமூர்த்தங்கள்
30. கருடாழ்வார்வாகனம்	விஷ்ணு, கிருஷ்ணர்.
31. சூரவாகனம் அரக்கன்	கந்தசாமி, குமாரசாமி, ஆறுமுகம்.
32. ராவணேச்வரன். ராக்ஷஸன்	சிவனார் (கைலாசநாதர்)
33. கைலாச கிரி வெள்ளிமலை	உமாமகேசர் சிவனார்

பகல்நேர வாகனவகைகள்

வாகனங்கள்	ஏற்கும்தெய்வங்கள்
34. சூரியன் / சூரியபிரபை கதிரொளி வட்டம்	ஸகல தெய்வங்கள் சிவன், பெருமாள், கந்தன்
35. சந்திரன் / சசிபிரபை மதியொளி வட்டம்	ஸகல தெய்வங்கள் சிவன், பெருமாள், தேவீ, கந்தன்.
36. பத்மபீடம் / அப்ஜபீடம் (எட்டிதழ்தாமரைப்பூமேடை)	ஸகலதெய்வங்கள் சிவன், விஷ்ணு, முருகன்
37. கமலாஸனம் /அரவிந்தாசனம் பலஅடுக்குத்தாமைரைப்பூமேடை	பெண்தெய்வங்கள் உமை, வாணீ லக்ஷ்மீ
38. தண்டிகை (சிறியஎடுப்புபல்லக்கு), (ஆந்தோளிகா)	சிவன் ஸகலதெய்வங்கள் பெண்தெய்வம், சிற்றுலா
39. சிபிகை பல்லக்கு பெரும்பல்லக்கு பெரியஎடுப்புபல்லக்குபவனி	சிவன் ஸகலதெய்வங்கள்
40. கண்ணாடி பல்லக்கு / மணிபல்லக்கு/ரத்னபல்லக்கு	ஸகலதெய்வங்கள் சிவன், பெருமாள், தேவிகள்
41. முத்துப்பல்லக்கு / மூடுபல்லக்கு	ஸகலதெய்வங்கள் தேவிகள்
42. புஷ்பப் பல்லக்கு	ஸகலதெய்வங்கள்
42. புஷ்பகவிமானம் / மலர்க்கோயில், (பூமண்டபம்/பூங்கொடிவளைவு)	ஸகலதெய்வங்கள் கிராமதேவதைகள்
44. விமானம் (கோயிலமைப்புவகை)	ஸகலதெய்வங்கள் சிவன், விஷ்ணு, தேவிகள்

45. சப்பரம் (கட்டுக்கோயில்), (எடுப்புக்கோயில்)	ஸகலதெய்வங்கள் சிவன், விஷ்ணு, தேவிகள்.
46. ரதம் சிறுதேர், வண்டிவாஹனம் (குதிரை வண்டி)	ஸகலதெய்வங்கள் சிவன், விஷ்ணு, தேவி
47. மஹாரதம்(பெருந்தேர்) (ஆழித்தேர்)	ஸகலதெய்வங்கள் சிவன், விஷ்ணு, தேவி
48. மஞ்சம் பர்யங்கம் (தொட்டியம்) (கட்டில், திண்ணைவடிவம்)	பெண்தேவதைகள் சிவன், விஷ்ணு, முருகன்
49. சிம்மாசனம் அரசுஅரியணை ராஜ அரியாஸனம் (நாற்காலி)	ஸகலதெய்வங்கள் சிவன், விஷ்ணு, முருகன்
50. பத்ரபீடம் பலமுனைப்பீடம் (பொருள்நிலைவாகனம்) (12/16 கோணமுள்ள இருக்கை)	ஸகலதெய்வங்களின்இருக்கை
51. நரவாகனம் தோளில் சுமப்பவன் (மனிதன் தாஸன் பணியாளர்)	குபேரன், நிருருதி, அசுரன்
52. சவவாகனம் (பிண இருக்கை) (மானுடதேஹவாகனம்)	நிருருதி, சாமுண்டீ, காளீ, பைரவர்
53. சுவானவாகனம் / சுனவாகனம் (மோப்பநாய் வாகனம்)	பைரவர்வகைகள், காவலர், வீரனார், ரக்ஷகர்
54. பெண்சிங்கவாகனம், கேஸரீ	கேதுகிரகம், கேதுகோள்.
55. கபோதவாகனம் புறாபறவை	கேது, சாயாகிரகவாஹனம்
56. ஐராவத கஜவாகனம் (நான்கு தந்தமுள்ள வெள்ளையானை)	சிவன், இந்திரன், முருகன்
57. மேருபர்வதம் / தங்கமலைசிகரம்	உமாதேவீ, துர்கை, காளி
58. ரத்தினபீடம் /ஸ்படிகசிலாவேதீ (மரகதபீடம் / மணிமேடை)	ஸகலதேவதைக்கானது தக்ஷிணாமூர்த்தி, குருநாதர்
59. மகிஷாசூரன் (எருமைகீழுடலும் அசுரமேலுடலும் உடையது)	துர்கையம்மன், சாமுண்டீ
60. தென்னைமரம் (கற்பகத்தருவிற்குமாற்றானமரம்)	சிவன்திருமால், கந்தசாமி, தேவியர்
61. கழுதை/கர்தப வாகனம், (கோவேறுகழுதை)	சீதளாதேவீ, வசூரீதேவீ, உக்ரா
62. வாழைமரம் (கற்பகம்)	திருமால் , முருகன்
63. அரசமரம் (போதிமரம்) அச்வத்தம்	விநாயகர், திருமால், புத்தர்
64 வேங்கைமரம் (காட்டுமரம்)	குமாரசாமி, கந்தலீலைமரம், வள்ளீகாந்தன், முருகன்மரம்

தமிழிலக்கியத்தில் தெய்வ வாகனக்குறிப்பு (தொல்லியல் மரபு)

வேதங்களிலும் ஆகமங்களிலும் புராணங்களிலும் கூறியவாறே நமது செந்தமிழ் இலக்கியங்களிலும் திருமுறைகளிலும் தெய்வங்களையும் வாகனங்களையும், பற்றியகுறிப்புகள் காணப்படுவதால் இதன் தொன்மையை அறியமுடிகிறது. கோஷ்டம் (கோயில் என்பது) என்பதே தமிழில் கோட்டம் எனப்படுகிறது. தேவிகோஷ்டம், கந்தகோஷ்டம் குமரகோஷ்டம் என்பது போல அக்காலத்தில் வாகனதெய்வங்கள் உரியதலங்களில், ஏற்ற அறைப்பகுதியில் வைக்கப்பட்டு விளங்கின எனவும் அறியலாம்.

கற்பகமரம், ஐராவதம் எனப்படும் வெள்ளையானை, நாகவாகனம், சந்திரன் சூரியன், வேல், வஜ்ஜிரம், போன்ற வாகனங்கள், பிரபைகள், ஆயுதப்படைகள், முதலியனவும் தனித்தனிக் கோயில்களில் வைத்து வணங்கப்பட்ட சூழலை தமிழிலக்கியமான சிலப்பதிகாரம் என்னும் நூல்.

அமரர் தருக் கோட்டம் வெள்ளானைக் கோட்டம்
புகர் வெள்ளை நாகர்தம் கோட்டம் பகல் வாயில்
உச்சிக்கிழான்கோட்டம் ஊர்க்கொட்டம் வேற்கோட்டம்
வச்சிரக் கோட்டம் புறம் பணையான் வாழ்கொட்டம்

நிச்சந்தக் கோட்டம் நிலாக்கோட்டம்.

என்பனபோன்ற விளக்கப்பகுதிகளில் தெளிவாகப் புலப்படுத்துகிறது. (அமரர்தரு=தேவர்மரம். வெள்ளையானை= ஐராவதம், நாகர்=நாகவாகனம் கோட்டம் = கோயில், பகல்வாய் =நிலா, உச்சிக்கிழான்=கதிரவன். வேலாயுதகோயில், வச்சிரப்படை = திரிசூலம்.)

இத்தகைய உயிரினங்களை அன்றி கருவிகளைக்கொண்ட சிறப்புடனேயே தெய்வங்கள் போற்றப்பட்ட நிலையினை

உவணச் சேவல் உயிர்த்தோன் நியமமும்
மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச் சேவற் கோடியோன் கோட்டமும் .... எனவும்,
பிணிமுகமேற் கொண்டு அவுணர் பீடழித்த ....எனவும்,
நீலப் பறவை மேல் நேரிழை தன்னொடும்
ஆலமர் செல்வன் புதல்வன் வரும் .... எனவும்
எருமைத் தலைமேல் நின்றவள்
கரிய திரிக் கோட்டுக் கலைமிசை மேல் நின்றாயால்

அரிமான் சின விடைமேல் நின்றாயால் ....எனவும்,

சிலப்பதிகாரம் முறையே திருமாலையும், பலராமரையும், முருகனையும், துர்கை எனப்படும் கொற்றவையினையும் குறிப்பிடுவது தெய்வவாகன ஆய்வில் சிந்திக்கத் தக்கதாகும்.

(இங்கு, உவணச்சேவல் = கருடன் / பருந்து. மேழி = கலப்பை ஆயுதமாய் (ஏந்திய பலராமன்) கோழி = சேவற்கொடியோன் =முருகன், நீலப்பறவை = மயில், பிணிமுகம் = யானை, கொற்றவை = துர்கை / காளி. அரிமான் = சிங்கம் சினவிடை = சிங்கவாகனம், எருமைத்தலை மேல் நின்றவள் = துர்க்கைபாதபீடம்)

இவ்வாறு தெய்வங்களை அவற்றின் வாகனம், கொடி, ஆயுதங்கள் இவற்றைக்கொண்டு சிறப்பிப்பது பண்டைய வழக்காக விளங்கி யிருந்ததை அறியமுடிகிறது. இவ்வாறு வாகனங்களைக் கொண்டே தெய்வங்களை அழைத்தல், உணர்தல், வழிபடுதல் என்பது தமிழர்களின் வழக்கம் என்பது திண்ணம். இம்முறைகள் பாபிலோனியா, கிரேக்கம், ரோமாபுரி போன்ற பலநாடுகளிலும் இருந்துள்ளதை வரலாற்றாலறியலாம்.

(ஆகுத்வஜன் = எலிக்கொடியோன் = விநாயகர், விருஷத்வஜன் = விடைக்கொடியோன் =சிவன், உவணமூர்திமாமாயன் = கருடக்கொடியோன் = விஷ்ணு, குக்குடத்வஜன் = சேவற்கொடியோன் = கந்தன் சிம்மத்வஜா = சிங்கொடியினள் காளி, துர்கை. முதலியோர்.)

இவ்வாறு தெய்வங்கள் சிறப்புப்பெயரால் அதன் காயத்ரீமந்திரங்களில் வாகனம், மற்றும் கொடிஉடையவர்களாகப் போற்றப்பட்டுள்ளனர்.

மேலும், திருமாலுக்கு நாரை என்கிற வெண்குறுகு, கொக்கு முதலிய நீர்ப்பறவையை வாகனமாக அவருடன் அமைப்பது வழக்கம்.

ஆலயமஹோத்ஸவத்தால் ஏற்படும் சமூகப்பயன்கள்

கிராமம் முதலான மக்களின்வசிப்பிடங்களில் அமைந்துள்ள சமயக் கோயில்களில் செய்யப்பட்டுவருகிற திருவிழா முதலான நிகழ்ச்சிகளால் நமதுதேசத்திற்கும், நம்தேசத்தின் அனைத்து உயிரினங்களுக்கும், இறைவனிடம் தெரிவிக்கப்பகிற பொதுநல விண்ணப்பங்களாலும், ஊர்வலத்தின்போது இறைவனது திருநோக்கால் மக்கள் காணப்படுவதாலும் எல்லோருக்கும் அவர்களது விருப்பங்கள் யாவும் கைகூடுவதுடன் இஷ்டசித்தியானது ஏற்படுகிறது.

ஆலயமஹோத்ஸவங்களால், நமது தேசத்தின், தொன்மையும், பாரம்பரியமும் உள்ளதான வேதாகமகலாசாரமரபு வழித்தொழில்கள், மெய்யறிவுக்கொள்கைகள், பண்பாடுகள் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும் தனதானியங்களின் செழிப்பும் அங்கு ஏற்படுவதாகவும் அறியலாம். நேர;முகமாகவும், மறைமுகமாகவும், துணைபுரிவோர் மூலமும், பலவகைக்கைத்தொழில்கள், கலைத்துறைகள், கலைஞர்களின் திறமைகள் மேன்மை அடைகின்றன. கிராமநிர்வாகிகள் சமயநம்பிக்கையுடன் ஆகமஉத்ஸவவிதிமுறைகளைப் பின்பற்றினார்களேயாகில் ஆங்காங்கு ஆண்டுதோறும் ஏரிகள், குளங்கள், ஆலயம், மண்டபம், பூந்தோட்டம், கிராமப்பகுதிகள், கிராமவீதிகள் முதலியன நன்குசெப்பனிடப்பட்டும், சீர்திருத்தமும், சுத்தமும் செய்யப்பட்டு ஆண்டுக்கு ஒருமுறை பழுதுகள் நீக்கப்பட்டு கிராமம் நன்கு பராமரிக்கப்பட்டதாக ஆகிறது. இதன்

காரணமாக அக்கிராமமக்கள் வசிப்பிடங் 172 களையும், வீதிகளையும், பொதுஇடங்களையும், தூய்மையாக பாதுகாத்திடவேண்டும் என்பதை உணர்வதுடன், ஊருக்கு தூய்மையையும், தெய்வபலத்தையும் உத்ஸவத்தின்வாயிலாகப் பெறஇயலும். மேலும் ஆலயத்தின் தேர; மற்றும் வாஹனவகைகள், பயன்பாட்டிற்கான மண்டபங்கள் இவைகள் விழாவின்பொருட்டு துவங்குவதற்கு முன்பாகவே ஆண்டுதோறும் செப்பனிடப்படுவதால் யாவும் வலுவுடனும், பொலிவுடனும் பாதுகாக்கப்படுகின்றன.

இத்துடன் உத்ஸவத்தில் ஊர்வலத்து புறப்பாட்டு வீதிஉலாவின் விதிமுறைகள் முழுமையாகப் பின்பற்றப்படுவதனால் நம் தேசத்தின் பாரம்பரிய கலாசார அறநெறிக்கல்விகள், கலைகள், மரபுத்தொழில்கள் காக்கப்பட்டு தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் செல்லவும், மக்கள் மகிழ்ச்சி பெற்று தேகஆரோக்யம் பெறவும் முடியும். கல்வி மற்றும் கலைத்துறைகள் வளர்ச்சி பெறுகின்றன. வேதாகம தமிழ்மறைகள் ஓதப்படுவதாலும், இயல், இசை, நாடகம், நாட்டியம், சமயச்சொற்பொழிவு, அறவழிஉபநியாஸங்கள் போன்றவை நிகழ்த்தப்படுவதாலும், கலாசார மறுமலர்ச்சிபோன்றவை உத்ஸவத்தால் ஏற்பட்டு இறையருளால் மக்கள் தீக்ஷைபெற்று மேன்மை பெறுகின்றனர்.

கோயில் தெய்வங்கள் ஊர்வலதின் பயன்கள்

உத்ஸவகாலத்தில் சுவாமியுடன் பொதுமக்கள் பின்தொடர;ந்து கிராமப்பிரதக்ஷிணம் செய்வதற்குரிய பயனை ஆகமங்கள் எடுத்துக்கூறி வலியுறுத்துகின்றன.

தூராத்வ சிரம விக்லாந்தஸ் ஸதீ: கிருத்வா பிரதக்ஷிணம்.

மார்க்க கிலேசோப் யதேசாய பவேத் பாபாநி நச்யதி.

ஜநை: பிருஷ்டானு யாதோ அத்ர பூலோகேது ஸஜீவதி.

தொலைதூரம் பின்தொடர்வதாலும், சிரமத்தாலும், சோர்ந்தபோதும், விடாதுவலம்வருபவரின் அனைத்து பாவங்களும் அழிந்துவிடுகின்றன. பின்தொடர்ந்து வரும்பொழுது ஜனங்கள் இவ்வுலகில் நல்வாழ்வு பெற்றுவிளங்குவர்.

உத்ஸவே பலிகாலேது யதா குர்வன் பிரதிக்ஷிணம்.

பதேபதே அச்வமேதஸ்ய பலம் பிராப்நோதி மானவ:

யதா கிருத்வா நமஸ்காரம் ததா லோகே ஸுபூஜித: (சுப்ரபேதம் 20-15)

மேற்கண்ட சுப்ரபேதாகம வசனத்தின்படி ஊர்வலத்துடன் தொடர்ந்துவருபவன் அச்வமேதயாகத்தின்அரிய பயனை எளிதில் அடைந்தவனாகி உலகில் பூசிக்கப்படுவான் என்று அறியமுடிகிறது. எனவே சுவாமியுடன் ஊர்வலத்தில் பொதுமக்கள் தவறாது பங்குப்ற்றி அரிய பலபயன்கைள அடையவேண்டும்.

கோயில் உற்சவத்தில் சுவாமிதரிசனத்தின் பயன்கள்

மகோத்ஸவத்தின்போது தொலைவிலிருந்து சிவனைதரிசித்து வணங்குபவர், அக்கணமே அனைத்து பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான் என்கிறது ஆகமம். சுஜீவதரிசனபயன் கூறும் சான்று,

தூரதஸ் து சிவம் திருஷ்ட்வா நமஸ்கிருத்வா து யோ நர:
முச்யதே ஸர்வ பாபேப்யோ நிர;மோகாத் இவ பன்னகா:

ஆதலால் பன்னிருமாதத்திலும் திருவாதிரைநாளானது விரதம், பூஜை, உத்ஸவம், தானம் இவைகளை செய்திட உகந்ததிருநாளாகும். எண்ணற்ற புண்ணியத்தைத்தரும். சைவாகம உத்ஸவவகைகளை ஆஸ்தீகமக்கள் யாவரும்அறிந்து, உரியகாலத்தில், உரியமுறையில் இறைவனுக்கு உத்ஸவத்தைச்செய்வித்து, யாவரும் உலகில் போகமோ‘லீதி இஷ்டபயனைப் பெற்று, உய்யவேணுமாய் அடியார;கள் பொற்பதம் பணிந்துவேண்டுகிறோம்.

சுபமஸ்து நித்தியம்.

லோகோஸ் ஸமஸ்தாஸ் சுகிநோபவந்து

வாழ்த்து

வாழ்கவே வாழ்க! என்நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க! மல மறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க! மெய்ஞானத்தவன்தாள்
வாழ்கவே வாழ்க! மலமிலாதான் பாதமே. (குருமூர்த்தி)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதுஎல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே. (திருஞானசம்பந்தர்)

வான்முகில் வழாது பெய்க மவளம் சுறக்கமன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க, நற்றவம் வேள்வி மல்க,
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
(தெய்வச்சேக்கிழார்)

ஆறிரு தடந்தோள் வாழ்க, ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க, குக்குடம் வாழ்க, செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க, யானை தன்அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க, வாழ்க சீர் அடியா ரெல்லாம்.
(கச்சியப்ப சிவாசார்யர்)

மழை வழங்குக, மன்னவன் ஓங்குக,
பிழையில் பல்வளம் எங்கும் பெருகுக,
தழைக அஞ்செழுத்து ஓசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே. (கோயிற்புராணம்)

வைய நீடுக மாமழை மன்னுக.
மெய் விரும்பிய அன்பர் விளங்குக.
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக.
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

வாழ்க சைவம்! திருச்சிற்றம்பலம்! வாழ்கசீரடியாரெல்லாம்!

உ

ஸ்ரீகுருப்யோநம:

சென்னை-சிவத்திரு. வி. சோமசேகர சிவாசார்யார் தொகுத்து வெளிவந்துள்ள ஸமய நூல்களை ஆஸ்தீக அன்பர்கள் வாங்கிப் பயனடையவும்

---

1. **விபூதி மகிமை** (கையிருப்பு இல்லை)
2. **உருவத்தில் இறைவன்** (கையிருப்பு இல்லை)
3. **நவராத்ரிதேவியர் துதித்திரட்டு** (கையிருப்பு இல்லை)
4. **நூதனாலய பஞ்சஸம்ஸ்காரவிளக்கம்** (கையிருப்பு இல்லை)
5. **ஆலயாகார அர்த்தவிவரணம்** (கையிருப்பு இல்லை)
6. **காக்கும் காளியின் காருண்ய மஹிமை** (கையிருப்பு இல்லை)
7. **சைவாகமத்தில் சிவயோகநெறி (தமிழில் 100 பக்கம்) ரூ.100.00**
   (சிவயோகப் பயிற்சிசெய்யும் விதிமுறைகள், அதன் எட்டு உறுப்புக்கிரியைகள்,செய்முறைகள்,ஆகமச்சான்றுகளுடன் விளக்கும் நூல்)
8. **திவ்யாபிஷேக விதி (தமிழில் 136 பக்கம்) ரூ.150.00**

   (தெய்வங்களுக்கான திருமஞ்ஜன விதிமுறைகள், அபிஷேகத்தின் பொருட்கள், இலக்கணங்கள், 36 வகைகள், பயன்கள் இவற்றை ஆகம சான்றுடன் விளக்கும் நூல்.)
9. **புஷ்ப்பார்ச்சன விதி (தமிழில் 124 பக்கம்) ரூ.150.00**

   (இறைவழிபாட்டிற்கு ஏற்ற 200 மலர்வகைகள், காலங்களுக்கு உரியவை, மலர்களின் சேமிப்புமுறை, பயன்பாட்டுமுறை, மலர்வகைகளின் பயன்கள் இவற்றை சான்றுடன் விளக்கும் நூல்)

10. உத்ஸவபேதக் கிரியாபோதம் (தமிழில் 172 பக்கம்) ரூ.300.00

(சைவாலய விழாவகைகளின் செயல்முறைகள். பெருவிழாவின் 24 வகைகள், விழாக்கிரியைகள், தெய்வப்புறப்பாட்டுமுறை, ஹோமபலிதான முறைகள், விழாக்கால பரிஹாரக்கிரியைகள் இவற்றை சான்றுகளுடன் விளக்கும் ஆய்வுப்புத்தகம்)

11. நக்ஷத்திர சாந்தி விதானம் (தமிழில் 300 பக்கம்) ரூ.600.00

(27 நட்சத்திரங்களின் பரிஹார சிறப்புஹோமங்கள், சாந்தி விதிமுறைகள், பிறந்தநாளில் செய்யத்தக்க வழிபாட்டுவகைகள், தானவகைகள் இவற்றை சான்றுகளுடனும், விஷயங்களை அட்டவணையில் விளக்கும் ஆய்வுப்புத்தகம்)

12. ஹோம லக்ஷண ஸங்கிரஹம் (தமிழில் 326 பக்கம்) ரூ.300.00

(இறைவேள்விகளின் இலக்கணங்கள், 36வகையில் அக்னியின் உருவப்படங்கள், யாகசாலைகள், குண்டங்கள், 16வகைஹோமங்கள், ஹோமப்பொருட்கள், ஹோமகாலத்திய பரிஹாரக்கிரியைகள் இவற்றை சான்றுடன் விளக்கும் ஆய்வுப்புத்தகம்)

13. புவனேச்வரீ பூஜாகல்பம் (தமிழில் 175 பக்கம்) ரூ.300/–

(தேவீஉபாசனாமுறை, தத்துவவிளக்கம், புவனேச்வரீபூசையின் செய்முறை, ஸ்ரீசக்ரதேவிகளின் அரியபல துதிகள், பலவகை நாமார்ச்சனைகள், அடங்கிய வீட்டுப்பூசைக்கான நூல்.)

14. சிவாகம கட்டுரைத் திரட்டு (பாகம் 13) (தமிழில் 136 பக்கம்) ரூ.200/–

(சைவாகமங்களில் ஆறு அறிஞர்களின் ஆறுதலைப்புகளைப்பற்றிய சான்றுடன் கூடிய 6 சிறப்புக்கட்டுரைகளின் தொகுப்புத்தமிழ்நூல் வரிசையில்1)

15. சண்டீயாக மஹிமை விளக்கம் (தமிழில்) ரூ.300/–

(சண்டீதேவியின் மஹிமைகள், சண்டீயாக வகைகள், சண்டீஹோமத்திற்கான பொருட்கள், செய்முறைகள், சண்டீதுர்கையின் அரியபல துதிகள், பலவகை நாமார்ச்சனைகள் அடங்கிய தமிழ்நூல்)

16. திவ்ய ஸ்தவ கதம்பம் (பக்கம்–150) ரூ.200.00
(தமிழ்.& கிரந்தஎழுத்தில்) (தெய்வத்துதித் திரட்டு)

கிரந்தஎழுத்தில் மூலமானதுதிகளும், அவைக்கு சமஸ்கிருதம் மற்றும் தமிழ் இருமொழிகளில் பதவுரையும் கொண்டுள்ள 200 துதிகள் உள்ளநூல்.

17. காளீ பூஜா ப்ரபாவம் (பக்கம்–380) ரூ.450.00
(காளீ வழிபாட்டுப் பெருமைகள்)

காளீஉபாஸனை முறை, உருவதத்துவ விளக்கம், ஆலயபூஜை விதிமுறைகள், 1008,300,108, நாமாவளிகள், துதிகள், யந்திரபூஜைமுறைகள் அடங்கிய நூல்.

18. சுபாஷித ரத்னமாலா – நற்கூற்று மணிமாலை ரூ.400.00
(மூலமும் – உரையும் முற்றிலும் தமிழ்எழுத்தில்)
இராமாயணம், மஹாபாரதம், ஸ்மிருதிகள், புராணங்கள், காவியங்களிலிருந்து தொகுக்கப்பட்ட 1008 நீதிசாஸ்த்திர உபதேச நல்மொழிகளை கருத்துரையுடன் கொண்டுள்ளநூல்.

19. சிவாகம ஸூக்தி மஞ்ஜரீ (சிவாகம நல்மொழிப் பூங்கொத்து) ரூ.200.00
சைவாகமங்களில் அனைவரும் அறியவேண்டிய நல்மொழிகளை, தனித்தனி தலைப்புகளில் தமிழில் மூலசுலோக சான்றும் அவைக்கு தமிழில்கருத்துரையும் கொண்ட 324 தருமங்களின் தொகுப்புநூல்.

20. சைவ நிர்வசனவசனாமிருதம். (பக்கம்–114) ரூ.200/–
(சைவாகம பரிபாஷைச் சொற்பொருள் விளக்கம்) (தேவநாகரீ மட்டும்)
அரியசொற்களுக்கு பெயரின் சான்றுடன் காரணவிவரங்களைக் கூறும்நூல்.

21. சிவஸ்தோத்ர முக்தாவளீ (கிரந்தலிபி) (பக்கம்–104) ரூ.100/–
சிவத்தோத்திரங்களின் தொகுப்பு

22. ஸ்ரீநவதுர்கா (ஜபவிதி) நாகரலிபி & தமிழ்

23. பிரத்யங்கிரா ஜபவிதி (நாகரலிபி)

24. சிவசக்தி ஸ்தோத்ரமாலா. தேவநாகரி (பக்கம்–320) ரூ.200/–
க்ஷேத்திரசிவலிங்க மாஹேச்வரமூர்த்திகள் மற்றும் பரிவாரதெய்வங்களின் துதிகளுடனும், தமிழ்உரையுடன் கூடிய சிவமஹிம்ன துதிகளுடனும் உள்ளது.

25. பத்ரகாளீ தீபபூஜையும் தேவீபாராயண துதிதிரட்டும்.
(தமிழ்) (பக்கம்–160) ரூ.150/–

26. பிரத்யங்கிரா ஸபர்யா ஸர்வஸ்வம் (நாகரலிபி)
தேவீபிரத்யங்கிரா பைரவர் முதலான தெய்வங்களின், மந்திரங்கள், புரச்சரணவிதிகள், யந்திரம், பூஜை, யாகம் செய்முறைகள், அஷ்டகர்மபிரயோக விதிகள், கவசஸஹஸ்ர நாமதுதிகள் பிரார்த்தனைகளை உள்ளடக்கியது.

27. பிரத்யங்கிரா சகஸ்ரநாமாவளி (நாகரலிபி மற்றும் கிரந்தலிபி)
(காளிதுதி, 108 நாமாவளிகள், பைரவிதுதி, 108 நாமாவளிகள், பிரத்யங்கிரா தேவியின் ஸகஸ்ரநாமாதுதிகள், 1000 நாமாவளிகள், கவசம், மூலமந்திர ஜபவிதிகள் அடங்கியது.) (பக்கம்–148) ரூ.200/–

28. கோயில்விழாக்களின் வாஹனஉலா (ஆலய உத்ஸவ வாஹன யானக்ரமம்)
ஒன்பது வகைக் கோயில்களின் தெய்வவிழாவின் வீதி உலா புறப்பாட்டு விதிமுறைகள், ஸேவாகாலத் திருமுறைத்துதிகள், 50வாஹன விளக்கப்படங்கள் அடங்கிய நூல்) (பக்கம்–256) ரூ.400/–

29. ஆகமம் ஆலயம் ஆதிசைவர் (பாகம்–2) – சைவாகம மரபுசார்ந்த ஐயத்தெளிவுதரும் வினாவிடைகளின் தொகுப்பு நூல்.

30. ஆலயதேவதா ப்ரதிஷ்டாயந்திர தகடு ஒன்று கிரந்தஎழுத்தில் ரூ.1000.00
(சைவைணவக் கோயிலின் தெய்வச்சிலைகளுக்கான ஆகம பிரதிஷ்டைக்கான தகட்டு யந்திரங்கள், தாமிரக்தகட்டில்அளவு இஞ்ச் 3 x 3 அல்லது 5 x 5 ல் ஆகமவிதிமுறைப்படி எழுதியவை, உரிய மந்திரவகைகளுடன் கூடியவை உரிவைக்கு மட்டுமே கிடைக்கும்.





குறிப்பு

குறிப்பு

குறிப்பு

குறிப்பு

ஸ்ரீ லோகோஸ்
இண்டர்நேஷனல்

எண்.14, முதலாவது குறுக்கு தெரு, 6-வது கனகசபை தெரு,
டாக்டர் காணு நகர், நெசப்பாக்கம், சென்னை-78.

90031 13311, 900311 4444 mail@srilogos.com www.srilogos.com



நூல் தொகுப்பாசிரியர்

சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாசார்யார்

சென்னை, மஹரிஷி வேதாகம பாடசாலையின் முன்னாள் ஆகம பண்டிதரும், மகாபலிபுரம் அரசினர் கோயில் கட்டிடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியின் முன்னாள் ஆகமவிரிவுரையாளரும், கும்பாபிஷேகங்கள், ஆகமகருத்தரங்குகள், விசேஷயாகங்கள், பலவற்றை பலமுறை தலைமைஏற்று நிகழ்த்தியவரும், கனடாவில் இந்துக்கோயிலின் முன்னாள் தலைமை அர்ச்சகரும், பாடசாலைகளின் ஆண்டுத் தேர்வுகளில் பலமுறை பரிக்ஷாதிகாரியாக பணியாற்றியவரும், சிவாகம வித்யா பீடத்தின் ஸ்தாபகரும், சமய போதகராக இருந்து பல மாணவர்களை உருவாக்கிய வரும், சைவநெறி தழைக்கத் தொண்டாற்றி வருபவரும், சென்னை சிவாசாரியார் அறக்கட்டளையின் கௌரவ ஆலோசகரும், அதன் சைவாகம கலாச்சார வித்யா கேந்திரத்தின் குருமுதல்வரும், சென்னையில் 8 ஆண்டுகள் மாதந்தோறும் 96 சிவாகம சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தியவரும், சமயம் சார்ந்த 27-க்கும் மேற்பட்ட விளக்க நூல்களை தொகுத்து வெளியிட்டவரும் ஆவார்.